ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ நவம்பர். 03, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 31 ❖ ரூ.10

### சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும்

# வலியுறுத்தல்

## இந்தியா கூட்டணிக்கு எந்த ஒரு சிங்கிள் பாய்ண்ட் அஜெண்டாவும் கிடையாது அப்படியே இருந்தாலும் அது மோடி எதிர்ப்புதான்: பாஜக தலைவர் அண்ணாமலை

**சென்னை, நவ. 3–**

**தமிழகத்தின் நலனுக்காக, மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர் சங்கரய்யா. சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**



தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது, "தமிழகத்தின் நலனுக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவர் சங்கரய்யா. சுதந்திர போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும். ஆளுநருக்கு அனுப்பபட்டிருக்கும் கோப்புகளை பற்றி எங்களுக்கு தெரியாது. எங்களுடைய நிலைப்பாடு, சங்கரய்யா அவர்களுக்கு நிச்சயமாக டாக்டர் கவுரவ பட்டம் கொடுக்க வேண்டும் என்பதுதான். அவருக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்காதது ஏன் என ஆளுநர் மாளிகைதான் விளக்கமளிக்க வேண்டும். சங்கரய்யாவுடன் வேறுயாருக்காவது, பரிந்துரைத்து பட்டியல் அளிக்கப்பட்டதா எனத் தெரியவில்லை.

நெல்லையில் நடந்திருப்பது மிகப்பெரிய கொடூரம். சாதி வன்கொடுமைகள் தமிழகத்தில் இன்னும் நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கேயோ, ஏதோ ஒரு இடத்தில் ஒரு சமுதாயமாக நாம் தவறு செய்கின்றோமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. கல்வி ரீதியாக தவறு செய்கின்றோமோ, ஆரம்பக் கல்வியில் கோட்டை விடுகின்றோமோ, மாணவச்செல்வங்களுக்கு பள்ளிக்கூடத்தில் சாதி என்ற நச்சு விதை வளர்வதற்கு சில இடங்களில் நாமே காரணமாக இருக்கின்றோமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

மேலும் சாதியை வைத்து அரசியல் செய்கின்ற நிறைய கட்சிகள், அதை சாதிய சமுதாயத்திற்குள் புகுத்தி இருக்கின்றார்களா என்ற அச்சம் இருக்கிறது. வளராத மாநிலங்களில் இன்னும் சாதிக்கொடுமை எப்படி இருக்கிறது, அதேபோன்று தமிழகத்திலும் சாதிக் கொடுமை இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. அனைவரும் சேர்ந்து சாதியை ஒழிக்க வேண்டும். மனிஷ் சிசோடியா கைது செய்யப்பட்டதை பொருத்தவரை, உரிய ஆவணங்களோடுதான் அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். இந்தியா கூட்டணிக்கு எந்த ஒரு சிங்கிள் பாய்ண்ட் அஜெண்டாவும் கிடையாது. அப்படியே இருந்தால் அது மோடி எதிர்ப்புதான். இந்தியா கூட்டணி வலுவாக இல்லை என்பது உண்மை தான். அதோடு இந்தக் கூட்டணி நீடிக்கவும் வாய்ப்பில்லை.

யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்பேன் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன். மக்களை மேம்படுத்துவதற்கு யார் வந்தாலும் வாங்க. நான் இதைப் பண்ண போறேன். இந்த மாதிரி பண்ன போறேன் என்று மக்களுக்கு ஒரு கொள்கையைக் கொடுங்க. மக்கள் தேர்வு செய்யட்டும். அரசியலுக்கு யாரும் வருவதற்கு யாருமே தடையாக இருக்கக் கூடாது. மக்களுக்கு சாய்ஸ் இருக்க வேண்டும். 3 கட்சி இருப்பதற்கு 6 கட்சி இருந்தால் இன்னும் சிறப்புதான்.

மக்கள் தேர்வு செய்வார்கள். குறிப்பாக அதுவும் புதியவர்கள் அரசியலுக்கு வரும் போதுதான் சிஸ்டம் மாறும். பழையவர்களே 30 வருடம் 40 வருடம் இருக்கிறார்கள். அதனால்தான் நீரோடை போல ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். விஜய் உள்பட நிறைய புதியவர்கள் அரசியலுக்கு வரட்டும். அவர்கள் எல்லோரும் மாற்று அரசியலை முன்வைக்கட்டும். தமிழக மக்கள் யாரை முடிவு செய்கிறார்களோ அதை ஏற்றுக்கொள்ளலாம்" என்றார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், மைலாப்பூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம மேம்பாட்டு சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.35.30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலைப்பணியின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## தேர்தலுக்கு முன் எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்ய பாஜக அரசு சதித்திட்டம் மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

கொல்கத்தா, நவ. 3–



தேர்தலுக்கு முன் எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்ய மத்திய பாஜக அரசு திட்டமிட்டு இருப்பதாக மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டியுள்ளார்.

டெல்லி அரசின் மதுபான முறைகேடு வழக்கு தொடர்பாக நேற்று ஆஜராக முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தியது. இந்நிலையில் கெஜ்ரிவால் கைதுசெய்யப்படலாம் என நம்பதகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக டெல்லி மாநில கல்வி அமைச்சர் அதிஷி மர்லினா கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி அடுத்த ஆண்டு வரவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக அனைத்து எதிர்க்கட்சிகளின் குரல்களை அடக்க மத்தியில் ஆளும் பாஜக முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார். பொது தேர்தலுக்கு முன் அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களையும் கைது செய்து காலியாக உள்ள நாட்டில் தாங்கள் மட்டுமே வாக்களிக்கும் வகையில் பாஜாகவினர் சதித்திட்டம் தீட்டி வருவதாகவும் அவர் கூறினார். இதனிடையே 2014ம் ஆண்டில் இருந்து விசாரணை அமைப்புகள் தொடர்ந்த வழக்குகளில் 95% எதிர்க்கட்சி தலைவர்கள் மீதுதான் தொடரப்பட்டு இருப்பதாக ஆம்.ஆத்மி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் சத்தா தெரிவித்துள்ளார்.

### தெலுங்கானாவில் சந்திரசேகர ராவ் கொள்ளையடித்த
## ரூ.1 லட்சம் கோடி பணம் திரும்ப மக்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் : ராகுல் காந்தி உறுதி

ஹைதராபாத், நவ. 3–



தெலுங்கானா மக்களிடம் இருந்து சந்திரசேகர ராவ் கொள்ளையடித்த ரூ.1 லட்சம் கோடி பணத்தை மக்களுக்கே திரும்ப வழங்கப்படும் என்று காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலத்தில் இம்மாதம் 30ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் பாரத் ராஷ்ட்ரீய சமிதி, காங்கிரஸ், பாஜக இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. கல்வார்குர்தி தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, தெலுங்கானாவில் 2% வாக்குகளை கொண்டுள்ள பாஜகவால், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த முதலமைச்சரை எப்படி கொடுக்க முடியும் என உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் வாக்குறுதியை சுட்டிக் காட்டி கேள்வி எழுப்பினார்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மக்களின் நிலத்தை காலீஸ்வரம் நீர்ப்பாசன திட்டத்திற்காக விற்று பாரத் ராஷ்ட்ரிய சமிதி ரூ. 1 லட்சம் கோடி ஊழல் செய்துள்ளதாக குற்றம் சாட்டிய ராகுல், மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட பணம், மீண்டும் மக்களுக்கே திரும்ப வழங்கப்படும் என்று உறுதி அளித்தார். இது தொடர்பாக பேசிய அவர், “உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் அடங்கிஉள்ள தெலுங்கானா மாநிலம் குறித்து மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். உங்கள் முதல்வர் பொது மக்களிடம் இருந்து கொள்ளையடித்துள்ளார். அதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தெலங்கானா மக்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட அந்த தொகையை மீட்டு மக்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். பிரதமர் மோடியை போல் நான் வெறும் வாக்குறுதி மட்டும் கொடுப்பவன் அல்ல. ஒரு வாக்குறுதி அளித்தால் அதனை நிறைவேற்றுவேன்,” என்று கூறியுள்ளார். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மாதம் தோறும் பெண்களுக்கு ரூ.2,500 உதவித் தொகையும் எரிபொருள் சிலிண்டருக்கு மானியமாக ரூ.500 வழங்கப்படும் என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

## ராமர் கோயிலை வேண்டுமென்றே கிடப்பில் போட்டது காங்கிரஸ்: அமித்ஷா குற்றச்சாட்டு

கர்னால் (ஹரியாணா), நவ. 3–



நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் திட்டத்தை பல ஆண்டுகளாக காங்கிரஸ் அரசு கிடப்பில் போட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

ஹரியாணாவின் கர்னால் நகரில், மாநில அரசின் 5 திட்டங்கள் தொடங்கும் விழா நடைபெற்றது. முதல்வர் மனோகர் லால் கட்டா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமித்ஷா கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர், "இன்று 5 மக்கள் நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, முதல்வரின் தீர்த்த யாத்திரை திட்டம். அயோத்தியில் பிரமாண்ட ராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்று மக்கள் பல ஆண்டுகளாக காத்திருந்தார்கள். தொடர்ந்து அரசை வலியுறுத்தினார்கள். ராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை செய்தார்கள்.

ஆனால், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு ராமர் கோயிலை கட்டும் திட்டத்தை காங்கிரஸ் அரசு கிடப்பில் போட்டது. நாட்டு மக்கள் நரேந்திர மோடியை இரண்டாவது முறையாகவும் பிரதமராக்கினார்கள். அவர், ராமர் கோயில் கட்டுவதற்கான பூமிபூஜையை தொடங்கினார். தற்போது கோயில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. ராமர் சிலையை பிரதிஷ்டை செய்யும் விழா அடுத்த ஆண்டு ஜனவரி 22-ம் தேதி நடைபெற இருக்கிறது. பூமி பூஜையை தொடங்கி வைத்த பிரதமர் மோடி, சிலை பிரதிஷ்டையிலும் பங்கேற்க இருக்கிறார். ஹரியாணா மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் அனைவரும் அயோத்தி ராமர் கோயிலுக்குச் சென்று ராமரை தரிசிக்க வேண்டும்.

மத்தியில் நரேந்திர மோடி அரசும், மாநிலத்தில் மனோகர் லால் கட்டா அரசும் உள்ளன. இந்த இரு அரசுகள் மீதும் யாரும் எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்த முடியாது. காங்கிரஸ் கட்சிக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வளர்ச்சித் திட்டங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள விரும்பினால், பிரதமர் மோடி மற்றும் முதல்வர் கட்டார் செய்த பணிகளைப் பாருங்கள். அதன் மூலம் நீங்களும் வளர்ச்சித் திட்டங்களை செய்ய முடியும்" என்று அமித்ஷா குறிப்பிட்டார்.

## கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் மேல்முறையீடு தகுதியானோருக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும் தமிழக அரசு தகவல்

சென்னை, நவ. 3–





கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களில் தகுதியானோருக்கு நவ.25 முதல் குறுஞ்செய்தி அனுப்பப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

குடும்பத்திற்காக வாழ்நாள் முழுவதும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், அவர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 12,000 உரிமைத்தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கை தரத்தை உயர்த்தி, சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் உயரிய நோக்கம் கொண்டது ஆகும் இந்த திட்டம்.

கடந்த செப்டம்பர் மாதம் 15ம் தேதி இந்த திட்டம் தொடங்கப்பட்டது. கடந்த மாதமே 14 மற்றும் 15 தேதிகளில் பயனாளிகளுக்கு பணம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மகளிர் உரிமை திட்டத்தில் தகுதியானவர்களுக்கு நவ.25ம் தேதி முதல் குறுஞ்செய்திகள் அனுப்பப்படும் என தமிழ்நாடு அரசு தகவல் தெரிவித்துள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு மேலும் 11.85 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். தங்கள் பெயரை சேர்க்க கோரி அக்.25 வரை 11.85 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

மேல்முறையீடு செய்துள்ளவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணி நடைபெற்று வருகிறது. தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை கிடைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே திட்டத்திலுள்ள பயனாளிகளுக்கு தீபாவளிக்கு முன்னதாக ரூ.1,000 செலுத்தப்பட வாய்ப்பு உள்ளது. கடைசி நாளான அக்டோபர் 25 வரை 11.85 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர்.

## கிராம சபை கூட்டத்தில் கேள்வி கேட்டவருக்கு அடி தலைவர் உள்ளிட்ட மூவருக்கு அதிகாரி நோட்டீஸ்

ஆதனக்கோட்டை, நவ.3–



உள்ளாட்சி தினத்தையொட்டி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபைக்கூட்டம் நடைபெற்றது. அந்த வகையில் புதுக்கோட்டை ஒன்றியம் ஆனக்கோட்டை அருகே உள்ள தொண்டைமான்ஊரணி ஊராட்சியில் உட்காட்டுப்பட்டி கிராமத்தில் நந்தவனம் ஊரணிக்கரையில் உள்ளாட்சிகள் தின கிராமசபைக்கூட்டம் துணைத்தலைவர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த கிராமசபைகூட்டத்தில் தொண்டைமான் ஊரணி ஊராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் கிராமத்தைச்சேர்ந்த விஜயகுமார் என்ற சமூக ஆர்வலர் கிராமசபைக்கூட்டம் நடத்துவதற்கான குறைவெண் வரம்பு உறுப்பினர்கள் இல்லையென பற்றாளர் குமாரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு பற்றாளர் குமார் பதிலளிக்கவில்லை. கிராமசபைக்கூட்டம் நடத்துவதற்கு போதிய உறுப்பினர் இல்லையென சமூக ஆர்வலர் கூறிக் கொண்டிருக்கும் போது கிராமசபைக்கூட்டத்தில் இருந்தவர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து சமூக ஆர்வலர் விஜயகுமாரை தாக்கியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான சமூக ஆர்வலர் விஜயகுமார் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவம் தொடர்பாக விஜயகுமார் கூறியது* கிராமசபைக்கூட்டத்தில் கேள்வி கேட்டதற்காக ஊராட்சி மன்றத் தலைவரின் ஆதரவாளர்கள் எண்ணை தாக்கினர். அவர்களிடமிருந்து தப்பித்து ஆதனக்கோட்டை போலிசாருக்கு தகவல் கொடுந்துவிட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளேன் என கூறினார். சமூக ஆர்வலர் விஜயகுமார் கொடுத்த புகாரிலும், விஜயகுமார் பாஸ்கர் என்பவரை தாக்கியதாக கொடுத்த புகாரிலும் ஆதனக்கோட்டை போலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

*கிராம சபைக்கூட்டத்தில் சமூக ஆர்வலர் தாக்கப்பட்டது குறித்து புதுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் வேலுவிடம் கேட்டபோது*

ஊராட்சி மன்றத்தலைவர் தாமரைச்செல்வி ஊராட்சி மன்றத்துணைத் தலைவர் ரமேஷ் ஊராட்சி செயலாளர் மாணிக்கம் ஆகிய மூவருக்கும் ஏழு நாட்களுக்குள் பதிலளிக்க விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் பதில் கிடைக்கப்பெற்றவுடன் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார். கிராமசபைக்கூட்டத்தில் கேள்விகேட்டு சமூக ஆர்வலர் தாக்கப்பட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக வைரலாகிவரும் நிலையில் இந்த சம்பவம் ஆதனக்கோட்டை சுற்றுவட்டார பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்று

3-11-




பணக்காரன் ஆவதற்கு தேவைகளைக் குறைத்தாலே போதும்

சோபகிருது ஐப்பசி 17 | NOV - நவம்பர் வெள்ளி FRIDAY | ரப்யுஸானி 18 மேல்நோக்குநாள்

ஷஷ்டி கா.1.41 திருவாதிரை கா.9.8 தியா 40.2 சித்த. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் புறப்படு கண்டருளல். கோவில்பட்டி, தூத்துக்குடி, தென்காசி இத்தலங்களில் ஸ்ரீஅம்பாள் பவனி வரும் காக்ஷி. திருவிடை மருதூர் ஸ்ரீபிரகத்குசாம்பிகை புறப்பாடு.

6.4 துலா லக்கனம் இருப்பு நாழிகை 2 விநாடி 20

| | | | |
|---|---|---|---|
| இராகு : 10.30-12.00 | சூலம் : மேற்கு | ந.நேரம் காலை : 9.15-10.15 | |
| குளிகன் : 7.30-9.00 | பரிகாரம் : வெல்லம் | மாலை : 4.45-5.45 | 16கன்-சுக் |
| எமகண் : 3.00-4.30 | திதி : ஷஷ்டி | கௌரி பகல் : 12.15-1.15 | 17விரு-பு |
| கரணன் : 1.30-3.00 | 307 | இரவு : 6.30-7.30 | |

ராசிபலன்

| | |
|---|---|
| மேஷம் | குழப்பம் |
| ரிஷபம் | நற்செயல் |
| மிதுனம் | ஏமாற்றம் |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | உதவி |
| கன்னி | சினம் |
| துலாம் | மறதி |
| விருச்சி | ஓய்வு |
| தனுசு | துயரம் |
| மகரம் | போட்டி |
| கும்பம் | சுகம் |
| மீனம் | இன்பம் |

சந்தி : கேட்டை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரசுப்பள்ளிகளில் தினமும் நீட் தேர்வுக்குப் பயிற்சி



சென்னை : நவ. 3–

அரசு பள்ளி மாணவர்களுக்கு பள்ளி வேலை நாட்களின் போது மாலை வேளையில் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு நீட், ஜேஇஇ போன்ற தகுதி தேர்வுகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும்என பள்ளிக் கல்வித் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மருத்துவ படிப்பில் சேர்வதற்கு நீட் நுழைவு தேர்வில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. அது போல் ஐஐடி, என்ஐடி போன்ற மத்திய அரசு பல்கலைக்கழகங்களிலும், தனியார் பல்கலைக்கழகங்களிலும் பொறியியல் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் வெற்றி பெறஜேஇஇ எனும்பயிற்சி தேவைப்படுகிறது.

பெரும்பாலான சாதாரண ஏழை எளிய மாணவர்களுக்கான மருத்துவக் கனவு என்பது நீட் தேர்வுக்கு பிறகு கானல் நீராகிவிட்டது. அந்த தேர்வை ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசின் தரப்பில் பல்வேறு முறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நீட் தேர்வு கட்டாயம் என்ற நடைமுறையே தற்போது தொடர்கிறது.

நீட் தேர்வுக்கென பயிற்சிமையங்கள் இந்தியா முழுவதும்முளைத்துள்ளன. இவைகளில் எல்லாம் பல லட்சங்களை செலவு செய்து படிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. இந்த நீட் தேர்வால் அரசு பள்ளி மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள் என்பது பல்வேறு தரப்பினரின் குற்றச்சாட்டாக உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அரசுபள்ளி மாணவர்களுக்கும் நீட் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவை வாரந்தோறும் அளிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களால் பெரிய அளவில் சோபிக்க முடியாத நிலை இருந்தது. எனவே நீட் தேர்வுக்கு தீவிரமாக பயிற்சியளிக்க வேண்டும்என மாணவர்கள் தரப்பில் தொடர்ச்சியாக கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது.

அந்த வகையில் தற்போது அரசு பள்ளி மாணவர்களுக்கு பள்ளி வேலைநாட்களில்வாரத்தில் 5 நாட்களும் நீட், ஜேஇஇ பயிற்சி அளிக்கப்படும் என பள்ளிக்கல்வித் துறை தெரிவித்துள்ளது. தினமும் மாலை4மணிமுதல்5.30மணி வரை நீட் பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. திங்கள்முதல்வெள்ளிவரை இந்தபயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படும். யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது எனவும் பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

# மதுரையில் அம்மன் ரெஸ்டாரண்ட் புதிய கிளையை பிரபல திரைப்பட நடிகர் சூரி திறந்து வைத்தார்



மதுரை,நவ.3–

மதுரை கீழவெளி வீதியில் ராஜ்மஹால் அருகில் உள்ள அம்மன் ரெஸ்டாரண்டின் புதிய கிளையை பிரபல திரைப்பட நடிகர் சூரி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

முதல் விற்பனையை ஹயக்ரீவர் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனர்இன்ஜினியர்விஜய் ஆனந்த் துவக்கி வைத்தார், வருகைதந்தஅனைவரையும் அம்மன் ஹோட்டல் நிறுவனர் லட்சுமணன் வரவேற்றார், விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளை அம்மன் பிஆர்ஓ சூரிய பிரகாஷ் செய்திருந்தார் மேலும் நடிகர் சூரி கடை திறப்பு விழாவிற்கு வந்ததால் ரசிகர்களின் கூட்டம் அலைமோதியது அப்போது ரசிகர்கள் அவருடன் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.






மதுரை மாவட்டம் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளும் மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சார்ந்த வணிகர்களுக்கு சமாதான திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விலக்க கூட்டம் துவாரகா பேலஸ் பாண்டி கோவில் அருகில் நடைபெற்றது. இதில் வணிகப்பேரவைச் சங்கச் செயலாளர் அழகேசன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி-க்கு பொன்னாடை போர்த்திய போது எடுத்த படம். உடன் தமிழ்நாடு வணிக சங்கங்களின் பேரமைப்பின் வி. கோவிந்தராஜலு, மதுரை மண்டலத் தலைவர் டி. செல்லமுத்து, பொருளாளர் கே.பி. லெஷ்மி காந்தன், மாவட்டத் துணைத் தலைவர் நவீன் எம். வெங்கடேசன், ஜி.எஸ்.டி. ஆலோசகர் கிருஷ்ணசாமி, மாவட்ட இணைச் செயலாளர் ராஜா ராம் நாத் மற்றும் ஏராளமான இனைப்புச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தில் கிராம சபை கூட்டங்கள்



அரியலூர்,நவ.3–

அரியலூர் மாவட்டம் திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளாட்சி தினகிராமசபைகூட்டங்கள் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், வாரணவாசி ஊராட்சி மன்ற அலுவலகத்தில், உள்ளாட்சித் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்துக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார், ஊராட்சி செயலாளர் சபிதா தீர்மானங்களை படித்தார். சுகாதார அலுவலர்கள் உள்ளிட்ட அரசு பணியாளர்கள் பலரும், பொது மக்களுக்கான சேவை பணிகள் குறித்து விளக்கிப் பேசிய கூட்டத்தில், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாலசுப்ரமணியன், வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் பார்ப்பனச்சேரி, கீழப்பழுவூர்,மேலப்பழுவூர், மலைத்தான் குளம், அயன் சுத்தமல்லி, கீழகாவட்டாங்குறிச்சி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், தவுத்தாய்குளம் ஊராட்சி, வாலாஜா நகரம் போன்ற ஊராட்சி மன்ற அலுவலகங்களில் கிராம சபைகூட்டம்நடைபெற்றது, ஊராட்சி பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பணி தள பொறுப்பாளர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் உள்பட, பலர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் இன்று தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்: எம்எல்ஏ ராஜா அறிக்கை



சங்கரன்கோவில், நவ.3–

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜாஎம்எல்ஏவிடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, திமுக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி தென்காசி வடக்கு மாவட்ட கழகசெயற்குழு கூட்டம்சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் வைத்து இன்று 3 ந் தேதி மாலை 4-00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில,மாவட்ட,திமுக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், தவறாது கலந்து கொள்ளும்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# அரியலூரில் ஜாக்டோ ஜியோ கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



அரியலூர், நவ.3–

அரியலூர் மாவட்ட, ஜாக்டோ ஜியோ அமைப்பு சார்பில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் பழைய பேருந்துநிலையம்அண்ணா சிலை அருகே, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டமைப்பான, ஜாக்டோ ஜியோ சார்பில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு, அதன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழக ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் ஓ. கருணாநிதி தலைமை வகித்தார்.

சி பி எஸ் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும் உட்பட, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், தமிழக ஆசிரியர் கூட்டணி, அரசு கல்லூரி ஆசிரியர்கள் கழகம், தமிழ்நாடு பட்டதாரி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கம், தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் உட்பட, 14 சங்கங்களின் ஒருங்கிணைப்பான ஜாக்டோ ஜியோ அமைப்பு சார்பில், அவற்றின் நிர்வாகிகள் சிவராமன், சந்திரன், ரவிச்சந்திரன், பூங்கொடி, சிவக்குமார், காமராஜ் உள்பட, நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், மாநில நிர்வாகி மா.நம்பிராஜ் சிறப்புரையாற்றினார்.

முடிவில் மாவட்ட பொருளாளர் பரமசிவம் நன்றி கூறினார்.

### ஓட்டுநர், நடத்துனர்களுக்கு அரசு, பதிவு மூப்பின் அடிப்படையில்

# நேரடியாக பணி வழங்க வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை, நவ. 3–

ஓட்டுநர், நடத்துனர்களுக்கு அரசு, பதிவு மூப்பின் அடிப்படையில் நேரடியாக பணி வழங்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு அரசு மாநகர போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநர், நடத்துனர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்திடுவதற்காக ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து டெண்டர் கோரப்பட்டு பெறப்பட்டுள்ளது என்று செய்தி வருகிறது. மாநகர் போக்குவரத்து கழங்களில் முறையாக பயிற்சியும் சான்றிதழும் பெற்றிருந்தும் "இந்திய சாலை போக்குவரத்து" நிறுவனம் மூலம் சிறப்பு பயிற்சி பெற்றிருக்கும் ஓட்டுனர்கள் தான் பேருந்தை இயக்கி வருகிறார்கள்.

தினந்தோறும் பல்லாயிரக் கணக்கானோர் மாநகர போக்குவரத்தைதான் பயன்படுத்துகிறார்கள். உரிய பயிற்சியும், சான்றிதழும் பெற்று அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கு நேரிடையாக நிரந்தரப் பணிவழங்கவேண்டும்.பல ஆண்டுகாலமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு காத்திருப்பவர்களுக்கு இதனால் வேலைக்கு காத்திருப்பவர்களுக்கு அவர்களின் பதிவு வாழ்வாதாரம் செய்து எதிர்பார்ப்புடன் காக்கப்படும். மேலும் ஒரு நம்பிக்கை ஏற்படும். ஒப்பந்த நிறுவனங்கள் மூலம், ஒப்பந்த அடிப்படையில் பணி வழங்கப்பட்டால் பணி நியமனத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற நிறைய வாய்ப்புள்ளது.

ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயணிக்கும் பேருந்து பயணம், பாதுகாப்பு என்பது மிக முக்கியம். பயிற்சி பெற்ற முன் அனுபவம் உள்ள ஓட்டுனர்களுக்கு, நடத்துனர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு மூப்பின் அடிப்படையில் பணி அளிக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று ஜி.கே.வாசன் குறிப்பிட்டுள்ளார்.

# ஆளுநர் கையால் பட்டம் வாங்க மாட்டோம் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர்கள்



மதுரை, நவ. 3–

"ஜனநாயக மாண்பு, பல்கலைக்கழகத்தின் உரிமை என எதையும் மதிக்காமல் ஜனநாயக விரோதமாக செயல்படும் ஆளுநரின் கையில் முனைவர் பட்டத்தை வாங்கமறுத்து புறக்கணித்த பேரா.சுரேஷ், பேரா. சி.ரமேஷ்ராஜ்ஆகியோருக்கு வாழ்த்துகள்" என்று மதுரை எம்பி சு.வெங்கடேசன் கூறியுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம்வழங்கதமிழக அரசு முடிவு செய்தது. இதற்கான கோப்புஆளுநர்மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இந்த கோப்பில் கையெழுத்திட ஆளுநர் ரவி மறுத்துவிட்டார். இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை புறக்கணிப்பதாக உயர் கல்வித்துறை பொன்முடி அதிரடியாக அறிவித்தார். மேலும் மதுரை வரும் ஆளுநருக்கு கருப்புக்கொடி காட்டப்படும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்திருந்தது. இந்த பரபரப்புக்கு மத்தியில் காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. ஆளுநர் ரவி தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள்பட்டங்கள் பெற்றனர்.

அதே நேரத்தில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சுரேஷ், ரமேஷ் குமார் ஆகியோர் ஆளுநரின்கையில்முனைவர் பட்டத்தை வாங்க மறுத்து பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ளனர். இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தனது எக்ஸ் தளத்தில், "விடுதலை போராட்டம், ஜனநாயக மாண்பு, பல்கலைக்கழகத்தின் உரிமை என எதையும் மதிக்காமல் ஜனநாயக விரோதமாக செயல்படும் ஆளுநரின் கையில் முனைவர் பட்டத்தை வாங்க மறுத்து புறக்கணித்தபேரா.சுரேஷ், பேரா. சி.ரமேஷ்ராஜ் ஆகியோருக்கு வாழ்த்துகள். பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த 15க்கும் மேற்பட்ட சிண்டிகேட், செனட் உறுப்பினர்களுக்கும் வாழ்த்துகள்" என்று கூறியுள்ளார்.

# ஆரணி அருகே திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் உணவருந்திய ஏராளமானோருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது

ஊத்துக்கோட்டை, நவ3–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அருகே உள்ள மாதவரம் கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்கும், நடுக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்கும் புதன்கிழமை காலை ஆண்டார்குப்பம் பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது.

இந்நிலையில், செவ்வாய்கிழமை மாலை இக்கிராமத்தில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. விருந்து உபசரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில்,ஆரணி, மல்லியங்குப்பம்,மாவிலம்பேடு,போந்தவாக்கம்,நடுக்குப்பம், சின்னம்பேடு, வடக்குநல்லூர் உள்ளிட்ட பல்வேறுபகுதிகளைச்சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு விருந்து சாப்பிட்டனர்.

இந்நிலையில்,வீட்டிற்கு வந்த அவர்களுக்கு வயிற்றுப்போக்கு,வாந்தி, வயிற்றுவலி, காய்ச்சல் உள்ளிட்ட உபாதைகள் ஏற்பட்டது. இதனால் அவர்கள் ஆரணியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம், தனியார் மருத்துவமனைகள் மற்றும் மஞ்சங்காரணை, நல்லூர் பகுதிகளில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வரவேற்பு நிகழ்ச்சியில் பரிமாறிய உணவுவில் ஏதோ ஒவ்வாமை பொருள் கலந்ததே இப்பிரச்சனைக்கு காரணம் என கூறப்படுகிறது. இச்சம்பவம் ஆரணி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



புதுச்சேரி விடுதலை நாள் விழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் கலை பண்பாட்டு துறையின் மூலம் காரைக்காலில் அமைந்துள்ள அம்மையார் ஆலயத்தில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது, கலைமாமணி ராமலிங்கம் வழங்கிய பரதநாட்டிய நிகழ்ச்சி மற்றும் சத்தியசீலன் வழங்கிய புல்லாங்குழல் மற்றும் சாக்சபோன் நிகழ்ச்சி ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைத்தார்கள். உடன் உதவி நூலக தகவல் அதிகாரி திருமேனிசெல்வம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# செம்பனார்கோவில் ஒன்றியத்தில் கிராம சபை கூட்டம்



தரங்கம்பாடி,நவ 03:

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் உள்ளாட்சிகள் தின சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

காலஸ்திநாதபுரம் ஊராட்சியில் நடைபெற்ற உள்ளாட்சிகள் தின சிறப்பு கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிவள்ளி தலைமை வகித்தார். துணைத்தலைவர் சரவணன் வரவேற்றார்.இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன் கலந்து கொண்டு பேசினார்.கூட்டத்தில் தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் குறித்தும், தூய்மை பணியாளர்கள், சிறந்த மகளிர் குழுவினருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.டெங்கு ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு, நெகிழிப் பைகளை தவிர்ப்பது, வீடுகளில் முழு சுகாதாரத்தை கடைபிடிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதேபோல் செம்பனார்கோவில் ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார்.கிராம நிர்வாக அலுவலர் திலக்ராஜ், ஊராட்சி செயலாளர் மனோகரன் கலந்து கொண்டனர்.

பரசலூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். ஊரக வளர்ச்சி துறை உதவி திட்ட அலுவலர் ரமேஷ் பாபு, துணை தலைவர் சங்கீத நாராயணன், ஊராட்சி செயலாளர் நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேமாத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் தெட்சிணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதேபோல் திருக்கடையூர்,எடுத்துக்கட்டி சாத்தனூர், ஆக்கூர், தில்லையாடி, திருவிடைக்கழி உள்ளிட்ட ஊராட்சிகளில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு தகவல் அறியும் சமூக ஆர்வலர்கள் சங்க உறுப்பினர் பிறந்த நாளையொட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை தலைமை அரசு பெரியார் மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நபர்களுக்கு மதிய உணவாக அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட பொறுப்பாளர்கள் புலவனூர் நவமணி, கடுவன்குடி ஜோதிபாசு, நிவாஸ், ராஜதுரை, ஸ்ரீநாத், ராஜேஷ் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கினர்.

### கல்பட்டு கிராமத்தில் டவர் முறிந்து விழுந்து

# கல்லூரி மாணவர் பலியான சம்பவத்தை கண்டித்து கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்



ஊத்துக்கோட்டை, நவ.3–

திருவள்ளூர் மாவட்டம்,பூண்டி ஒன்றியம், மாமண்டூர் கிராமம் பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் ராமலிங்கம்-புவனா தம்பதியினர் ஆவர். ராமலிங்கம் மாநகரப் பேருந்து ஆவடி பணிமனையில் கண்டக்டராக பணியாற்றி வருகிறார்.

இத்தம்பதியினருக்கு தினேஷ்(வயது21), தனுஷ்(வயது20) என இரண்டு மகன்கள் இருந்தனர். தினேஷ் கன்னிகைப்பேர் ஊராட்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில், நேற்று மாலை கல்லூரி முடிந்து வெங்கல் வந்தார். பின்னர் வெங்கல்–சீத்தஞ்சேரி நெடுஞ்சாலையில் கல்பட்டு கிராமம் செல்லும் கூட்டுச்சாலையில் நின்று கொண்டிருந்தார்.

அப்பொழுது இந்தப் பகுதியில் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்தது இந்நிலையில் வனத்துறைக்கு சொந்தமான இப்பகுதியில் கேமரா பொருத்தப்பட்ட தவறு ஒன்று முறிந்து சாலையில் நின்று கொண்டிருந்த கல்லூரி மாணவன் தினேஷ் குமார் மீது விழுந்தது.கண்ணிமைக்கும் நேரத்தில் நடைபெற்ற இந்த விபத்தில் அவர் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியானார்.

இது குறித்து தகவல் அறிந்த கிராம மக்கள் நூற்றுக்கணக்கானோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.உயிர் இழந்த மாணவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும், வனத்துறையின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது. மேலும், இப்பகுதியில் ஆபத்தான முறையில் இன்னும் நான்கு கண்காணிப்பு டவர்கள் உள்ளது அவற்றை உடனடியாக பழுது பார்க்க வேண்டும் அல்லது அகற்ற வேண்டும்,சம்பவ இடத்திற்கு கலெக்டர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் வந்து இறந்த மாணவரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து வெங்கல்-சீத்தஞ்சேரி நெடுஞ்சாலையில் கல்பட்டு கிராம கூட்டுச்சாலையில் இறந்த கல்லூரி மாணவரின் உடலை வைத்துக் கொண்டு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.இதனால் சாலையின் இருபுறமும் ஏராளமான வாகனங்கள் ஸ்தம்பித்து நின்றது.சம்பவ இடத்திற்கு வனத்துறை அதிகாரிகள்,பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் ஆகியோர் விரைந்து வந்து போராட்டத்தில்ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால்,கிராம மக்கள் தங்களது கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பெருவாயல் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை,நவ3–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை,பெருவாயல் பகுதியில் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரி வளாகத்தில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன் தினம் நடைபெற்றது. வணிக மேலாண்மை துறை, வணிகவியல் துறையின் அக்கவுண்டன்சி மற்றும் பைனான்ஸ் துறை இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு,டி. ஜே.எஸ் கல்வி குழும தலைவர் டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். கல்லூரியின் இயக்குனர் ஏ.கபிலன் முன்னிலை வகித்தார்.

முன்னதாக அனைவரையும் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.லட்சுமிபதி வரவேற்றார். இதில்,சென்னை,மாதவரம் பால் பண்ணையில் இயங்கி வரும் மத்திய பனை மற்றும் பனை பொருட்கள் நிறுவனம்,காதி மற்றும் கிராம தொழில் ஆணையத்தின் உதவி இயக்குனரும், முதல்வருமான எஸ்.பிரபாகர், உதவி இயக்குனர் எம்.பிரபாகரன், நிர்வாக பயிற்சியாளர் எம்.எஸ். கண்ணா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்புரையாற்றி பேசினர்.முடிவில்,பி.காம் மாணவர் சி.கிஷோர் நன்றி கூறினார்.



சென்னை தண்டையார்பேட்டை வினோபா நகர் பகுதியில் சிதிலமடைந்த அங்கன்வாடி மையத்தை இடித்துவிட்டு புதிய அங்கன்வாடி கட்டிடத்தை கட்டி தருமாறு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமியிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கான அடிகள் நாட்டு விழா நேற்று நடைபெற்றதுநிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி பூஜை போட்டு பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே ஜே எபினேசர் சென்னை மாநகராட்சி நிலை குழு தலைவர் இளைய அருணா தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன், மேற்கு பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன், ஏ.டி. மணி, விமலா, சுந்தர், சத்தியமூர்த்தி மூர்த்தி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சீர்காழியில் நிருபரை தரகுறைவாக பேசி மிரட்டல் விடுத்த

# முன்னாள் ஐ.ஜி பொன் மாணிக்கவேலை கைது செய்ய கோரி பாதிக்கப்பட்ட செய்தியாளர் மற்றும் பத்திரிகையாளர் சங்கம் சார்பில் போலீஸில் புகார்



சீர்காழி, நவ,3

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டைநாதர் கோவிலுக்கு கடந்த 29 தேதி வருகை தந்த காவல்துறை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு முன்னாள் ஐ.ஜி பொன்மாணிக்கவேல் சாமி தரிசனம் முடித்து விட்டு செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது முதல்வர் மற்றும் அவர் குடும்பத்தினரையும்,தனியார் தொலைக்காட்சி நிருபரை மதரீதியாகவும், மாவட்ட ஆட்சியரை கிண்டல் செய்தும்,மறைமுகமாக பிஜேபிக்கு ஒட்டு கேட்டும், இந்துக்கள் அனைவரும் சொரணை இல்லாதவர்கள். என்றும் மற்றும் பொது மக்களையும் தரகுறைவாக பேசினார், நிருபரை மதரீதியாக பேசிதை மற்ற நிருபர்கள் கண்டித்ததை தொடர்ந்து பொன்மானிக்க வேல் அங்கிருந்து ஒட்டம் பிடித்தார், இந்த நிலையில் இதுகுறித்து பாதிக்கப்பட்ட தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் சீர்காழி காவல்நிலையத்தில் இஸ்லாமிய மதத்தையும் என்னையும் தரக்குறைவாக பேசி மன உளைச்சலுக்கு ஆளாகிய பொன் மாணிக்கவேலை கைது செய்து செய்ய கோரி புகார் மனு அளித்தார்.

இதே போல சீர்காழி தாலுகா பத்திரிகையாளர் சங்கம் சார்பிலும் பத்திரிகையாளரை மத ரீதியாக அவமதிப்பு, தமிழக முதல்வர், நீதிமன்ற சட்டம், இந்து சமய அறநிலையத்துறை ஆகியவற்றை தரகுறைவாக பேசிய பொன்மாணிக்கவேல் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து கைது செய்ய கோரி சீர்காழி காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தனர். போலீசார் பொன் மாணிக்க வேலை கைது செய்ய வில்லை என்றால் மிக பெரிய போராட்டம் விரைவில் நடைபெறும் என்று பத்திரிக்கை யாளர்கல் தெரிவித்தனர்

# காப்பீடு திட்டத்தில் பிரீமியம் செலுத்தும் அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது: பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் அறிவிப்பு



சென்னை,நவ,3

கடந்த 21 வருடங்களாக அமலில் உள்ள இந்த திட்டத்தின் மூலம் ஏராளமான வழக்கறிஞர்கள் பயனடைந்துள்ளனர். வழக்கறிஞர்கள் கூட்டு விபத்து காப்பீடு திட்டத்தில் பிரீமியம் செலுத்துவது மற்றும் திட்டத்தில் இணைவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் வெளியிடுள்ள அறிக்கையில் வழக்கறிஞர்கள் விபத்தில் பலியானால், அவரது குடும்பத்துக்கு ரூ.10 லட்சம், விபத்தில் ஊனம் அடைத்தால் ரூ.10 லட்சம், மருத்துவ சிகிச்சை பெற ரூ.1.25 லட்சம், சிகிச்சை பெற்று வீட்டில் ஓய்வு எடுக்கும்போது,34வாரங்களுக்கு ரூ.5 ஆயிரம் வழங்கும் விதமாக கூட்டு காப்பீட்டு திட்டத்தை பார்கவுன்சில் அமல்படுத்தி வருகிறது.

இந்த காப்பீடு திட்டம் கடந்த கடந்த 13ம் தேதி முதல் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. பார்கவுன்சில் சுமார் 80ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர் இவர்களில் சுமார் 17ஆயிரம் வழக்கறிஞர்கள் மட்டும் இந்த விபத்து காப்பீடு திட்டத்தில் இணைந்துள்ளனர்

பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்கள் விடுத்த வேண்டுகோள்களை அடுத்து இந்த திட்டத்தில் இணைவது மற்றும் பிரீமியம் தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் வரும் 15ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது



காரைக்கால் மாவட்டத்தில் அமைந்துள்ள நிரவி -திருப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட காக்கமொழி கிராமத்தில் இயங்கி வரும் அரசு தொடக்கப் பள்ளியில் நீண்ட காலமாக வகுப்பறை பற்றாக்குறையாக இருந்து வந்த நிலையில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட ஆட்சியரிடம் கூடுதல் வகுப்பறை கட்ட கோரிக்கை வைத்த நிலையில் பொதுப்பணித்துறை மூலம் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறப்பட்டு ரூபாய் 24 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்ட நேற்று காலை அப்பள்ளியில் பூமி பூஜையை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் தலைமையிலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையிலும் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் நிர்வாகப் பொறியாளர் சிதம்பரநாதன் மற்றும் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# பட்டாசு கடைகளில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து விற்பனையாளர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி



மயிலாடுதுறை, நவ.03–

தீபாவளி பண்டிகைக்கு இன்னும்சிலதினங்களேஉள்ள நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் பட்டாசு கடைகள் விற்பனையை துவங்கி உள்ளன. மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம், மங்கநல்லூர், வைத்தீஸ்வரன் கோயில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 300-க்கும் மேற்பட்ட பட்டாசு கடைகள் செயல்பட துவங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் சமீபத்தில் அதிக அளவு பட்டாசு விபத்துக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் பட்டாசு கடைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் பட்டாசு கடை உரிமையாளர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வு பயிற்சி கூட்டம் மயிலாடுதுறையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மீனா உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தனர். தொடர்ந்து பேசிய மாவட்ட ஆட்சியர் மகாபாரதி பட்டாசு கடை உரிமையாளர்களின் கவனக்குறைவால் வெடி விபத்து ஏற்பட்டு அப்பாவி ஊழியர்களின் உயிர்கள் பறிபோவதாகவும் , கடைகளில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் இருந்து வந்திருந்த பட்டாசு கடை உரிமையாளர்கள் பங்கேற்றனர்.

# மயிலாடுதுறை புனித அந்தோணியார் திருத்தலத்தில் ஜெபமாலை மாத தேர்பவனி



மயிலாடுதுறை, நவ- 03;

மயிலாடுதுறையில் பிரசித்தி பெற்ற புனித வனத்து மற்றும் பதுவை அந்தோணியார் திருத்தலத்தில் ஜெபமாலை மாதமான அக்டோபர் மாதம் முழுவதும் ஜெபமாலை, மாதா மன்றாட்டு மாலை, திருப்பலி உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில் ஜெபமாலை மாத நிறைவு விழாவை முன்னிட்டு சிறப்பு ஜெபமாலை, மாதாவின் மன்றாட்டு மாலை, தேர்பவனி மற்றும் திருப்பலி நடைபெற்றன. புனித அந்தோணியார் திருத்தல பங்குத்தந்தை ஜான் பிரிட்டோ அடிகளார் தலைமையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வுகளில் ஆரோக்கியமாதா, அடைக்கலமாதா, சந்தனமாதா, பூண்டிமாதா, செல்வமாதா போன்ற மாதாவின் திரு உருவங்களை வேடமணிந்து இருபது சிறுவர்கள் இறைமக்களுடன் பவனியாக சென்று, உலக அமைதிக்காகவும், அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் நிலைத்திடவும் வேண்டி சிறப்பு பிரார்த்தனை செய்தனர்.

இதில் அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், அன்பிய குழுவினர், பாடகற்குழுவினர், கிளை கிராம இறை மக்கள், பலிபீடசிறுவர்கள்,பங்குமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா முழுவதும் கிராமப்புறங்களில் வசிக்கக்கூடிய ஏழை மக்கள் வாழ்வாதாரத்தையும் வறுமையும் போக்கும் வகையில் 100 நாள் வேலை திட்டம் கிராம மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் வேலை செய்தவர்களுக்கு கடந்த சில மாதங்களாக சம்பளம் வழங்காமல் அலைக்கழிக்கப்பட்டு வரும் ஒன்றிய அரசை கண்டித்தும் தற்பொழுது தீபாவளி நெருங்கி வருவதால் பண்டிகைக்கு முன் சம்பளத்தை வழங்க வேண்டும், 100 நாள் வேலைக்கு போகும் பயனாளிகளுக்கு வேலை அட்டை மறுப்பு இன்றி வழங்க வேண்டும், பேரூராட்சி பகுதிகளில் நூறு நாள் வேலையை விரிவுபடுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் முற்றுகை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# செம்பனார்கோவில் ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரர் கோயில் பாலஸ்தாபன விழா





தரங்கம்பாடி, நவ. 03–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம்செம்பனார்கோவில் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை உடனுறை ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரர் கோயிலில் திருப்பணிகள் தொடங்குவதற்கான பாலஸ்தாபன விழா நடைபெற்றது.

இக்கோயில் திருப்பணிகள் தொடங்குவதற்குமுன்னிட்டு செவ்வாய்க்கிழமை மாலை விக்னேஷ்வரபூஜை,வாஸ்து சாந்தி,பூர்வாங்கபூஜைகள், மற்றும் இரவு யாகசாலை பிரவேசம் முதல் யாக பூஜைகள் துவங்கியது. தொடர்ந்து பூர்ணாஹுதி தீபாரதனை நடைபெற்றது.

தொடர்ந்துபுதன்கிழமை காலையில் இரண்டாம் கால யாக பூஜை துவங்கி பூர்ணாஹுதி தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து பத்து மணி அளவில் கடம் புறப்பாடு செய்யப்பட்டு விமான கலசங்களுக்கு பாலஸ்தாபன கலசாபிஷேகம் நடைபெற்றது.

இதில் இந்து சமய அறநிலையத்துறைசெயலர் அலுவலர் உமேஷ்குமார், ஆய்வாளர் கண்ணதாசன், மயிலாடுதுறை சிவபுரம் வேதசிவாகம பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ ஏ.வி.சுவாமிநாத சிவாச்சாரியார், ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், ஆலய குருக்கள் முத்துக்குமார், எழுத்தர் சதீஷ், மணிவாசகம் மன்றம் உபயதாரர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



இலங்கை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் ஆகியோர் சந்திப்பு இந்த சந்திப்பில் தமிழர் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஆவல் கணேசன் உடன் இருந்தார்

# புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்க கட்டுமான பணிக்கு காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார் முதல்வர்



ஆலங்குடி , நவ. 3-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து நேற்று காணொலிக்காட்சி வாயிலாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையினசார்பில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் கூடுதல் சிறு செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, சட்டமன்ற தொகுதிகளில் விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட விளையாட்டு வளாகமும் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் மூன்று வீரர்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் (2021-2022), மாணவர்களின் விளையாட்டுச் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் விதமாகவும், விளையாட்டரங்கத்தினை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் சிறு விளையாட்டரங்கம் 6 முதல் 7 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.


அதனடிப்படையில் சென்னை மாவட்டம் கொளத்தூர், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்- திருவெறும்பூர், திருப்பத்தூர் மாவட்டம்- வாணியம்பாடி, திருப்பூர் மாவட்டம்- காங்கேயம், மதுரை மாவட்டம்- சோழவந்தான், சிவகங்கை மாவட்டம்- காரைக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்- ஆலங்குடி, தூத்துக்குடி மாவட்டம்- திருவைகுண்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம்- பத்மநாதபுரம் ஆகிய 10 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கள் அமைப்பதற்கான கட்டிடப் பணிகளுக்கு காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் காணொலிக்காட்சி வாயிலாக முதலமைச்சர் சிறு விளையாட்டரங்க கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறு விளையாட்டரங்க மானது 6 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது. இதில் 1.200மீ / 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம், கையுந்து பந்து மைதானம், கூடைபந்து மைதானம், கோ-கோ மைதானம், கபாடி மைதானம், காலரி, ஸ்டோர் அறை, அலுவலக அறை, உடை மாற்றும் அறை மற்றும் கழிவறை என எழிலுற அமையப்பெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் ஆஷாராணி, கோகுலகிருஷ்ணன், வட்டாட்சியர் பெரியநாயகி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள்; கலந்துகொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் – கிராம சபை கூட்டத்தில் விவசாயி தாக்கப்பட்ட விவகாரம் : மனித உரிமை ஆணையம் விசாரணை



ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 3-

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பிள்ளையார்குளம் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் கேள்வி எழுப்பிய விவசாயி அம்மையப்பன் என்பவரை ஊராட்சி செயலர் தங்க பாண்டியன் காலால் எட்டி உதைத்த விவகாரத்தில் மாநில மனித உரிமை ஆணையம் தானாக முன்வந்து விசாரணையை தொடங்கியுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம் பிள்ளையார்குளம் ஊராட்சியில் கடந்த அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜெயந்தி அன்று கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலரை பணியிட மாறுதல் செய்த உத்தரவை செயல்படுத்தாதது குறித்து கேட்டதற்கு விவசாயி அம்மையப்பனை ஊராட்சி செயலர் தங்க பாண்டியன் காலால் எட்டி உதைத்தார். எம்எல்ஏ மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அதிகாரிகள் முன்னிலையில் கேள்வி கேட்டதற்காக விவசாயியை ஊராட்சி செயலர் தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்த புகாரின் பேரில் ஊராட்சி செயலர் தங்க பாண்டியன் மீது கொலை முயற்சி உட்பட 3 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த விவகாரத்தில் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் படி ஊராட்சி செயலர் தங்க பாண்டியனை வட்டார வளர்ச்சி அலுவலர் மீனாட்சி பணியிடை நீக்கம் செய்தார்.

இந்நிலையில், கிராம சபைக் கூட்டத்தில் விவசாயி தாக்கப்பட்ட விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் விளக்கம் அளிக்க மாநில மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் வழங்கி உள்ளது. மேலும் இது குறித்து தாமாக முன் வந்து விசாரணையைத் தொடங்கி உள்ளது. ஊராட்சிகள் உதவி இயக்குநர் விசாலாட்சி விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டு உள்ளார். நேற்று காலை ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவகத்தில் பிடிஓ மீனாட்சி, ஊராட்சி தலைவர் பூங்கொடி, விவசாயி அம்மையப்பன், குடிநீர் மேற்பார்வையாளர் வசந்தி ஆகியோரிடம் தனித் தனியாக உதவி இயக்குநர் விசாலாட்சி விசாரணை நடத்தினார். விசாரணை அறிக்கையை மாநில மனித உரிமைகள் ஆணையத்துக்கு அனுப்ப உள்ளார்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் ஊழல் தடுப்பு குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



புதுக்கோட்டை,நவ.3-

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் தமிழகம் முழுவதும் 30.10.2023 முதல் 5.11.2023 வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இதை முன்னிட்டு புதுக்கோட்டை சத்தியமங்கலம் சுதர்சன் பொறியியல் கல்லூரியில் ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் இமயவரம்பன், காவல் ஆய்வாளர் பீட்டர் , காவல் ஆய்வாளர் ஜவகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர், அவர்கள் கூறுகையில் ஊழல் என்பதன் உண்மையான பொருளையும் மக்களிடம் உள்ள குறைவான விழிப்புணர்வை பற்றியும் ஊழல் தடுப்பதற்கான மாணவ,மாணவிகளாகிய இளைஞர்களுடைய பங்கினையும் தெளிவாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் கு. ஸ்ரீநிவாஸன் துவக்க உரையாற்றினார், ஊழல் தடுப்பிற்காக கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் உறுதிமொழி ஏற்றனர், பின்னர் கட்டடவியல் பொறியியல் துறை தலைவர் செ. சுந்தர்ராஜ் நன்றியுரை ஆற்றினார், இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் கல்லூரி மாணவ மாணவிகளிடத்திலுள்ள ஊழல் மற்றும் ஊழல் தடுப்பு பற்றிய புரிதல் மேம்பட்டுள்ளது.

# கடலூரில் சுதந்திர போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் சிலை முதலமைச்சர் திறந்து வைத்தார்



சென்னை, நவ. 3-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அஞ்சலை அம்மாள் சிறுவயது முதல் சுதந்திரப் பற்று மிக்கவராக திகழ்ந்தார். 1921-ம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கியபோது அதில் கலந்துகொண்டு அஞ்சலை அம்மாள் தமது பொது வாழ்க்கையை தொடங்கினார். சென்னையில் நடைபெற்ற ஆங்கிலேய படைத்தளபதி ஜேம்ஸ் நீல் சிலை அகற்றும் போராட்டம், கடலூரில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகம் மற்றும் அந்நிய ஆடை எதிர்ப்பு போராட்டம், 1940-ம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகபோராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதற்காக சிறை தண்டனை பெற்றார்.

அஞ்சலையம்மாள் விடுதலைப் போராட்டத்திற்காக தனது குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, நாட்டிற்காக தியாகம் செய்தார். "தென்னாட்டின் ஜான்சி ராணி" என்று மகாத்மா காந்தியடிகளால் அழைக்கப்பட்ட அஞ்சலையம்மாள், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

இத்தகைய சிறப்புமிக்க சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலையம்மாள் நினைவைப்போற்றுகின்ற வகையில், கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

# தென்காசி மாவட்ட, வட்டார போக்குவரத்து அலுவலர் நடத்திய சோதனையில், காலாவதியான அரசு பேருந்து பறிமுதல்



தென்காசி நவ 03

தமிழக போக்கு வரத்து ஆணையர் சண்முகசுந்தரம் மாவட்டங்களில் அதிக ஒலி எழுப்பும் வாகனங்களில் உள்ள கருவிகளை பறி முதல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். அதன்படி தென்காசி மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலர் கண்ணன் தலைமையில், மோட்டார் வாகன ஆய்வாளர் மணிபாரதி மற்றும் ஊழியர்கள் தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் அரசு பேருந்து மற்றும் தனியார் பேருந்துகளை ஆய்வு செய்தனர். இதில் அரசு பேருந்துகள் உட்பட பல பேருந்துகளில் அதிக ஒலி எழுப்பும் கருவி பொருத்தப் பட்டிருப்பது கண்டறியப் பட்டது.

வட்டார போக்குவரத்து அலுவலர் கண்ணன் உத்தரவின் பேரில், கருவிகளை உடனடியாக அகற்றினர். இந்த நிலையில் அங்கு வந்த புளியரை லாலாகுடியிருப்புக்கு செல்லும் கிராமப்புற அரசு பேருந்து ஒன்றை ஆய்வு செய்தபோது தகுதி முடிந்து, 15 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் அதை அறிந்த மோட்டார் போக்குவரத்து ஆய்வாளர்கள் அதிர்ச்சி அடைந்து அந்த பேருந்தை பறிமுதல் செய்தனர். மேலும் அதில் பயணித்த 50-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் பயணிகளை இறக்கி விட்டதால் பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. இதே போல் அங்கு வந்த நகராட்சி வாகனத்திலும் அதிக ஒலி எழுப்பும் கருவி பொருத்தப்பட்டிருப்பது தெரிய வந்தது, அதனையும் அப்புறப்படுத்தினர். மேலும் இதுபோன்ற சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதுச்சேரியில் பயங்கரம் பிரபல ரவுடி வெட்டிக்கொலை



புதுச்சேரி : நவ. 3,

புதுச்சேரி கோவிந்தசாலை பகுதியைச் சேர்ந்தவர் பரத் (32), பிரபல ரவுடியான இவர் கடந்த சில மாதங்களாக புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில், ஆட்டோ ஓட்டி வந்துள்ளார். இவர் நேற்று காலை புதிய பேருந்து நிலையம் அருகே தனது ஆட்டோவில் அமர்ந்திருந்தார்.

அப்போது மற்றொரு ஆட்டோவில் வந்த மர்ம நபர்கள், பரத்தை அரிவாளால் வெட்டினர். அவர்களிடம் இருந்து தப்பிய அவர் தலைதெறிக்க ஓடினார். ஆனாலும், விடாமல் விரட்டிய அந்த கும்பல் பரத்தை ஓட ஓட சரமாரியாக வெட்டிக் கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்று தலைமறைவானது.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உருளையன்பேட்டை போலீஸார், பரத்தின் உடலைக் கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்கு கதிர்காமம் அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்து, வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்ட ரவுடி பரத் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதும். அவரை வெட்டிக் கொலை செய்தது அவரின் நண்பர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. மேலும் குற்றவாளிகளை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# 'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசியல் கட்சிக்கு உரிமை உள்ளது உயர் நீதிமன்றம் கருத்து



சென்னை : நவ. 3-

'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசியல் கட்சிகளுக்கு உரிமை உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. 'நீட்' தேர்வு விஷயத்தில் மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்து, அது மாணவர்கள் நலனுக்கு விரோதமாக அமைந்தால் வழக்கு தொடரலாம் என்றும் தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் வழக்கறிஞர் எம்.எல்.ரவி தாக்கல் செய்த மனுவில், 'நீட்' தேர்வுக்கு எதிராக 50 லட்சம் கையெழுத்துக்களை பெறும் இயக்கத்தை தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கியுள்ளார். இந்த இயக்கத்தில் இணைந்து கையெழுத்திடும்படி பள்ளி மாணவர்கள் நிர்பந்திக்கப்படுகின்றனர்.

'நீட்' தேர்வு தொடர்பாக மத்திய அரசு இயற்றிய சட்டத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அந்த சட்டத்துக்கு எதிராக மாநில அமைச்சர், போராட்டம் அறிவிக்க முடியாது. நீட் தேர்வுக்கு எதிராக, கையெழுத்து இயக்கம் தொடர்பாக அரசு எந்த அறிவிப்பும் வெளியிடாத நிலையில், இதை அரசின் கொள்கையாக கருத முடியாது

இந்திய அரசியலமைப்பின் மீது உண்மையும், மாறா பற்றும் கொண்டிருப்பதாக பதவியேற்றுக் கொண்ட அமைச்சர், சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்த முடியாது. பள்ளிகளில் இந்த கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. பள்ளி மாணவர்கள் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட நிர்பந்தத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். எந்த அனுமதியும் பெறாமல் நடத்தப்படும் இந்த கையெழுத்து இயக்கத்தை அமைச்சரே துவங்கியுள்ளதால், ஆசிரியர்களும், அதிகாரிகளும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

பள்ளி வளாகத்தில் எந்த அரசியல் நடவடிக்கைகளையும் அனுமதிக்க கூடாது. நீட் தேர்வுக்கு தயாராக வேண்டாம் என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் ஏற்படும். மேலும், படிப்பில் இருந்து மாணவர்களின் கவனம் திசை திரும்பும். எனவே, பள்ளிகளில் கையெழுத்து இயக்கம் நடத்த அனுமதிக்க கூடாது என பள்ளிக்கல்வித் துறைக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், கையெழுத்து இயக்கத்தால் மனுதாரர் எப்படி பாதிக்கப்படுகிறார்? நீட் தேர்வு விஷயத்தில் மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்து, அது மாணவர்கள் நலனுக்கு விரோதமாக அமைந்தால் வழக்கு தொடரலாம். அரசியல் கட்சி எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உள்ளது. மேலும், இதுபோன்ற பொதுநல வழக்குகளை தாக்கல் செய்ய ஒரு வரம்பு உள்ளது.

எனவே, இந்த வழக்கின் உண்மைத்தன்மையை நிரூபிக்க ஒரு லட்சம் ரூபாயை டெபாசிட் செய்தால் வழக்கை விசாரிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர். அப்போது, வழக்கை வாபஸ் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டு வழக்கை வாபஸ் பெற அனுமதியளித்து, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர். மேலும், சமுதாயத்துக்கு நலன் தருவதாக இருந்தால் பொதுநல வழக்குகளை விசாரணைக்கு ஏற்கலாம் என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

*நாளுக்கு நாள் குறைந்து வரும் நீர்வரத்து*

# முழுமையாக வறண்டு போகும் அபாயத்தில் தென்பெண்ணையாறு



அரூர் : நவ. 3,

தென்பெண்ணையாற்றில் நாளுக்கு நாள் குறைந்து வரும் நீர்வரத்தின் காரணமாக இவ்வாண்டு முழுமையாக வறண்டு போகும் அபாயத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு கர்நாடக மாநிலத்தில் பெய்த கனமழை காரணமாக தென்பெண்ணையாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணை ஆகியவை முழுமையாக நிரம்பின. இதனால் கடந்த ஆண்டில் கிருஷ்ணகிரி அணையில் இருந்து விநாடிக்கு 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் தென்பெண்ணையாற்றில் திறந்து விடப்பட்டது, கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் இருபுறமும் கரைகளை தொட்டவாறு ஆர்ப்பரித்து வெள்ள நீர் சென்றது.

இதனால் கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் தென்பெண்ணையாற்றுக் கரையோரம் உள்ள மக்களுக்கு பலமுறை வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லாத நிலையில் கர்நாடக மாநிலத்தில் இருந்து போதிய நீர் வரத்து கிருஷ்ணகிரி அணைக்கு வரவில்லை.

இதன் காரணமாக ஆற்றில் நீர் திறப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தென்பெண்ணையாற்றில் நீர்வரத்து என்பது வெகுவாக குறைந்துள்ளது. நாளுக்கு நாள் ஆற்றுப் பகுதியில் சிற்றோடைகளில் ஓடுவது போல் நீர் செல்வதை காண முடிகிறது. இதே நிலை தொடருமாயின் வற்றாத தென்பெண்ணையாறு முழுமையாக வறண்டு போகும் நிலைக்கு வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பருவ மழையும் போதிய அளவிற்கு தொடங்கப்படாமல் உள்ள நிலையில் இவ்வாண்டு விவசாயத்திற்கு மட்டுமின்றி குடிநீருக்கும் அவதிப்படும் நிலை வரும் என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

*இலவச மின்சார திட்டத்தைக் கொண்டு வந்த பெருமைக்குரியவர் கலைஞர்*

# பொதுக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா பங்கேற்று சிறப்புரை



சீர்காழி, நவ,3

கலைஞரின் நூற்றாண்டு விழா தமிழக முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் திமுக நகர கழக சார்பாக நகர செயலாளர் சுப்பராயன் ஏற்பாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் அவர் பேசியது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நரேந்திர மோடி ஆட்சியில் 48 ஆயிரம் கிராமங்களுக்கு நான்தான் மின்சாரம் வழங்கினேன் என மார்தட்டிக் கொள்ளும் மோடிக்கு நான் ஒன்று சொல்கிறேன் 1971 - 72 ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கிய பெருமைக்குரியவர் கலைஞர். மனிதனே மனிதன் சுமந்து இழுக்கும் கை ரிக்‌ஷாவை மாற்றி அமைத்து கை ரிக்‌ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்‌ஷா வழங்கிய பெருமைக்குரியவர் கலைஞர் ஆவார்.

மேலும் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தமிழுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு என பேசி இருந்தார் அதற்கு நான் திருச்சியில் நடந்த பொதுக் கூட்டத்தில் கூறினேன் அரசு நிகழ்ச்சியின் போது உங்களது கனத்த சரிதத்தை எழுந்து நிற்க வைத்து அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்தை கொண்டு வந்து அரசாணை பிறப்பித்த பெருமைக்குரியவர் கலைஞர் ஆவார். எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில் போது விவசாயிகள் 1 யூனிட்டுக்கு 1பைசா குறைப்பதற்காக போராட்டம் நடத்தி துப்பாக்கிச் சூடு வாங்கினார்கள் இது வரலாறு, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன் விவசாயி சங்கத்தினரை அழைத்த கலைஞர் குறைகளை கேட்டு அறிந்து இனி விவசாயிகள் மின்சாரத்துக்கு ஒரு பைசா கூட கட்டத் தேவையில்லை என விவசாயிகளின் மீது அக்கறை கொண்டு இலவச மின்சார திட்டத்தைக் கொண்டு வந்த பெருமைக்குரியவர் கலைஞர் இதே திட்டத்தை பத்து ஆண்டுகளுக்குப் பிறகு குஜராத் மற்றும் பஞ்சாபில் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என சட்டம் அமல்படுத்திய பெருமை கலைஞரையே சாரும் என தெரிவித்தார். மேலும் இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் , மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் உள்ளிட்ட திமுக நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# அட்யா பட்யா ஜூனியர் சாம்பியன்ஷிப் ஈரோடு அணிகள் சாம்பியன்




**சென்னை : நவ. 3,**

**தமிழ்நாடு அட்யா பட்யா சங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட அட்யா பட்யா சங்கம் ஆகியவை இணைந்து 17-வது ஜூனியர் அட்யா பட்யா மாநில சாம்பியன்ஷிப் போட்டியை பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள சந்திரா மெட்ரிக் பள்ளியில் நடத்தியது.**

இதில் ஆடவர் பிரிவில் 16 அணிகளும், மகளிர் பிரிவில் 14 அணிகளும் கலந்து கொண்டன. இந்த சாம்பியன்ஷிப்பில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன. இதில் ஆடவர் பிரிவில் ஈரோடு மாவட்ட அணி முதலிடம் பிடித்தது. திருவள்ளூர் மாவட்டம் 2-வது இடத்தையும், 3-வது இடத்தை செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் பெற்றன.

மகளிர் பிரிவிலும் ஈரோடு மாவட்ட அணி முதலிடம் பிடித்தது. தேனி மாவட்டம் 2-வது இடத்தையும், 3-வது இடத்தை திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட அணிகளும் பெற்றன. சிறந்த வீரராக ஆடவர் பிரிவில் ஈரோடு அணியை சேர்ந்த மோனிஷும், மகளிர் பிரிவில் தேனி அணியை சேர்ந்த கோபிகாவும் தேர்வானார்கள்.

# ஆப்கன் அணியின் வெற்றிக்கு பின்னால் இரு இந்தியர்கள்





**விளையாட்டு செய்தி : நவ. 3,**

**நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணியின் செயல் திறன் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. நடப்பு சாம்பியான இங்கிலாந்து மற்றும் முன்னாள் சாம்பியன்களான பாகிஸ்தான், இலங்கை அணிகளை வீழ்த்தியதன் மூலம் உலக கிரிக்கெட் அரங்கையே தன் பக்கம் ஈர்த்துள்ளது ஆப்கானிஸ்தான் அணி.**

2015-ம் ஆண்டு உலகக்கோப்பையில் அறிமுகமான ஆப்கானிஸ்தான் அணியானது 8 வருடங்களுக்குப் பிறகு கணிசமான வெற்றிகளை பெற்றுள்ளது. அந்த அணியின் செயல் திறனில் இருஇந்தியர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. ஒருவர் இந்திய அணியின் முன்னாள் வீரர் அஜய் ஜடேஜா, மற்றொருவர் முன்னாள் முதல்தர கிரிக்கெட் வீரர் மிலாப் மேவாடா.

இவர்கள் இருவருமே குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஜாம்நகரைச் சேர்ந்த அஜய் ஜடேஜா, உலகக்கோப்பைதொடருக்கு முன்னதாக ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அதே வேளையில் மெஹ்சானா நகரைச் சேர்ந்த மிலாப் மேவாடா கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் ஆப்கானிஸ்தான் அணியின் பேட்டிங் பயிற்சியாளராக செயல்பட்டு வருகிறார்.

1990-ம் ஆண்டு காலக்கட்டத்தில் இந்திய கிரிக்கெட்டின் அடையாளமாக அறியப்பட்ட அஜய் ஜடேஜா தனது துடிப்பான ஃபீல்டிங், பயமற்ற பேட்டிங் மற்றும் கிரிக்கெட் களத்தில் எப்போதும் புன்னகைக்கும் நடத்தை ஆகியவற்றுக்கு பெயர் பெற்றவர். 52 வயதான அவர், உலகக் கோப்பை தொடர் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

நவாநகரின் அரச குடும்பத்தில் பிறந்த அஜய்ஜடேஜா, வளமான கிரிக்கெட் பாரம்பரியத்தைக் கொண்டவர். ரஞ்சி டிராபி மற்றும் துலீப் டிராபி ஆகிய இரண்டு மதிப்புமிக்க முதல் தர கிரிக்கெட் தொடர் கோப்பைகளுக்கு அஜய் ஜடேஜாவின் உறவினர்களான ஜாம் ரஞ்சித்சின்ஜி மற்றும் துலீப்சின்ஜி ஆகியோரின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன.

1992 முதல் 2000-ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் அஜய் ஜடேஜா இந்திய அணிக்காக 196 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 5,359 ரன்கள் குவித்திருந்தார். இதில் 6 சதங்கள், 30 அரை சதங்கள் அடங்கும். சிலமுறை இந்திய அணிக்கு கேப்டன் பொறுப்பும் வகித்துள்ளார். அதேவேளையில் 15 டெஸ்ட்போட்டியில் இந்திய அணிக்காக களமிறங்கி 576 ரன்கள் சேர்த்திருந்தார். 2000-ம் ஆண்டில் சூதாட்ட சர்ச்சையைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் தடையை அஜய்ஜடோஎதிர்கொண்டார். எனினும் இந்த தடை 2003-ம் ஆண்டில் டெல்லி உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது.

மறுபுறம், மெஹ்சானாவில் உள்ள உன்ஜாவைச் சேர்ந்த மிலாப் மேவாடா, கடந்த ஆகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பேட்டிங் பயிற்சியாளராக பொறுப்பேற்றார். விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான மேவாடா, உள்ளூர் கிரிக்கெட் மற்றும் லிஸ்ட் ஏ கிரிக்கெட் போட்டிகளில் 37 ஆண்டுகால அனுபவத்தை கொண்டவர். ஜம்மு-காஷ்மீர், ஹைதராபாத், சத்தீஸ்கர் மற்றும் வதோதரா போன்ற உள்ளூர் அணிகளின் பேட்டிங் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

மிலாப் மேவாடாவின் நிபுணத்துவமானது ஆப்கானிஸ்தான் வீரர்களின் தொழில்நுட்பம், தந்திரோபாயங்கள் மற்றும் மன வலிமையை மேம்படுத்தியதாக நம்பப்படுகிறது. இதுவே அந்த அணி வலுவான இலக்குகளை எளிதாக அடைய உதவுவதாக கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் அணியை வேறுபடுத்தி காட்டும் ஒரு முக்கிய அம்சம், உயர் அழுத்த சூழ்நிலைகளில் சிறந்த செயல் திறனை வெளிப்படுத்துவதாகும். பதற்றமான தருணங்களில் கூட தங்கள் இயல்பான ஆட்டத்தை நிதானமாக வெளிப்படுத்தி தற்போது தொடரில் புள்ளிகள் பட்டியலில் 5-வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. இந்த குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவர்களின் வழிகாட்டிகள் மற்றும் பயிற்சியாளர்களின் விலைமதிப்பு மிக்க பங்களிப்புகளுக்கு ஒரு சான்றாகும்.

# கழுதைக்கு என் பெயரை வைத்த இந்திய ரசிகர்கள் மனம் திறந்த ஆஸ்திரேலிய வீரர்






**விளையாட்டு செய்தி : நவ. 3,**

**இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் தனது பெயரை கழுதைக்கு வைத்ததாக முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் டேமியன் மார்டின் கலந்துரையாடலின் போது கூறினார்.**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ரிக்கி பான்டிங் தலைமையிலான காலகட்டத்தில், கிரிக்கெட் உலகில் தோற்கடிக்க முடியாத அணியாக விளங்கியது. தொடர்ந்து 2 உலகக் கோப்பை பட்டம், 2 சாம்பியன்ஸ்கோப்பைபட்டம் என பல சாதனைகளையும் படைத்தது. அதேநேரம், ரிக்கி பான்டிங் தலைமையிலான அணிதான் அன்றைய காலகட்டத்தில் மிகவும் திமிர் பிடித்த அணியாகவும் இருந்தது என்று கூறப்படுக்கிறது.

அப்படியான ஒரு சம்பவம் கடந்த 2006ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சாம்பியன்ஸ் கோப்பை தொடரின் இறுதிப் போட்டிக்கு பிறகு கோப்பை வழங்கும் நிகழ்வின் போது, ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த டேமியன் மார்டின், அப்போதைய இந்திய கிரிக்கெட் வாரிய தலைவராக இருந்த சரத் பவாரை கையால் தள்ளிவிட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

சமீபத்தில் அஸ்திரேலிய வீரர்கள், ஆடம் கில்கிறிஸ்ட், பிராட் ஹாக் உள்ளிட்டோர் இணையம் மூலம் கலந்துரையாடினர். அப்போது, கில்கிறிஸ்ட் 2006ம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் இறுதிப் போட்டியில் நடைபெற்ற சம்பவம் பற்றி நினைவூட்டினார். அதுகுறித்து மனம் திறந்த மார்டின், அப்போதைய பிசிசிஐ தலைவர் சரத் பவார் தொடரில் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டனிடம் கோப்பையை வழங்கினார். அவர் அணியுடன் இணைந்து புகைப்பட எடுக்க விரும்பியதாகவும், ஆனால் அன்று மேடை சிறியதாக இருந்ததால் வீரர்கள் கொண்டாட்டத்திற்கு தயாராக இருந்தனர். அப்போது அவரை தான் கையால் லேசாக தள்ளிவிட்டேன் என்றார். இந்த சம்பவம் அப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் இந்திய ரசிகர்களை மிகவும் ஆத்திரப்படுத்தியதால், தனது உருவப்படத்தை எரித்ததாகவும், கழுதைக்கு தனது பெயரை சூட்டியதாகவும் தெரிவித்தார். இறுதியாக, அந்த கழுதை அன்றுடன் உயிருடன் இருந்திருக்குமா என்பது சந்தேகம் என கூறினார்.

## சாதனை படைத்த லியோனல் மெஸ்சி

# சிப்ஸ் பாக்கெட்டில் புகைப்படம் அச்சிட்ட லேஸ் நிறுவனம்




**பாரிஸ் : நவ. 3,**

**கால்பந்து உலகின் மிக உயரிய விருதான பலோன் டி 'ஓர் விருதை சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைக்கு வருடந்தோறும் பிபா வழங்கி வருகிறது.**

இந்த ஆண்டுக்கான பலோன் டி'ஓர் விருதை அர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி 8-வது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் கத்தாரில் நடந்த உலக கோப்பையை அர்ஜென்டினா வெல்வதில் முக்கிய பங்கு வகித்த மெஸ்சி, 7 கோல் அடித்ததுடன், 4 ஆட்ட நாயகன் விருதுகளையும் வென்று அசத்தினார். மெஸ்ஸி 2009, 2010, 2011, 2012, 2015, 2019 மற்றும் 2021-ம் ஆண்டுகளில் வென்று அசத்தியிருந்தார். ஏற்கனவே, இந்த விருதுக்கு அதிக முறை பரிந்துரைக்கப்பட்ட வீரர் என்ற சாதனையையும் மெஸ்சி படைத்திருந்தார்.

இந்நிலையில், பாரிசில் உள்ள ஈபிள் டவரில் லியோனல் மெஸ்சியின் சாதனையை கவுரவிக்கும் வகையில், அவரது புகைப்படம் லேஸ் சிப்ஸ் பாக்கெட்டில் அச்சிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வீடியோ வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

வரலாறு சினிமா

# நடிகை ஐஸ்வர்யா ராய் சொத்து மதிப்பு ரூ.776 கோடி



**மும்பை : நவ. 3, நடிகை ஐஸ்வர்யா ராய், மணிரத்னம் இயக்கிய 'இருவர்' படம் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். இந்தி, தமிழ் என தொடர்ந்து படங்களில் நடித்துவரும் அவர், தமிழில் ஜீன்ஸ், கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன், ராவணன், எந்திரன், பொன்னியின் செல்வன் படங்களில் நடித்துள்ளார்.**

கடந்த 2007-ம் ஆண்டு அபிஷேக்பச்சனை காதலித்து திருமணம் செய்துகொண்ட அவருக்கு ஆராத்யா என்ற மகள் இருக்கிறார். தனது 50 பிறந்த தினத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை கொண்டாடிய அவருக்கு ரசிகர்கள், திரையுலகினர் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்நிலையில், ஐஸ்வர்யா ராயின் சொத்து மதிப்பு பற்றி செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி ரூ.776 கோடிக்கு அவர் சொத்து மதிப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. முப்பது வருடங்களாக நடித்து வரும் அவர் ஒரு படத்துக்கு ரூ.10 முதல் ரூ.12 கோடி வரை சம்பளம் வாங்குகிறார். அவருக்கான படப்பிடிப்பு நாட்களைப் பொறுத்து இது மாறுபடும். விளம்பரப் படங்களுக்கு ரூ. 5 முதல் ரூ.6 கோடி சம்பளம் வாங்கும் இவர் ரியல் எஸ்டேட் தொழில்களிலும் முதலீடு செய்து வருகிறார். இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இவருக்குச் சொத்துக்கள் இருக்கின்றன.

# கமல்ஹாசனின் 'இந்தியன் 2' அறிமுக வீடியோவை வெளியிடும் ரஜினி, ஆமீர்கான், ராஜமவுலி




**சென்னை : நவ. 3,**

**கமல்ஹாசன் நடிப்பில் உருவாகி வரும் 'இந்தியன் 2' படத்தின் அறிமுக வீடியோவை நடிகர் ரஜினிகாந்த் இன்று வெளியிடுகிறார்.**

ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் படம், 'இந்தியன் 2'. லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசை அமைக்கிறார். இதில் ரகுல் ப்ரீத் சிங், காஜல் அகர்வால், பாபி சிம்ஹா, சித்தார்த், பிரியா பவானி சங்கர் உட்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பெரும்பாலும் முடிவடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இதன் கிராபிக்ஸ் பணிகள் அமெரிக்காவில் நடந்து வருகின்றன. இந்தப் படத்தில் முக்கிய வில்லனாக எஸ்.ஜே.சூர்யா நடித்து வருவதாகக் கூறப்படுகிறது. மேலும் நீளம் கருதி படத்தை இரண்டு பாகங்களாக வெளியிடவும் படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் 'இந்தியன் 2' படத்தின் அறிமுக வீடியோ இன்று மாலை 5.30 மணிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தமிழ் வெர்ஷனை நடிகர் ரஜினிகாந்த் வெளியிடுகிறார். இந்தி வெர்ஷனை நடிகர் ஆமீர்கானும், தெலுங்கு வெர்ஷனை இயக்குநர் ராஜமவுலியும், கன்னட வெர்ஷனை கிச்சா சுதீப், மலையாள வெர்ஷனை மோகன்லாலும் வெளியிட உள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

# 'தேஜஸ்' திரைப்படம் பார்த்து கண்கலங்கிய உ.பி. முதல்வர்





**லக்னோ : நவ. 3,**

**கங்கனா ரனாவத் நடித்து தமிழில் வெளியான 'சந்திரமுகி 2' எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இந்நிலையில் அவர் நடித்த இந்தி படமான தேஜஸ் அக். 27-ம் தேதி வெளியானது.**

சர்வேஷ் மேவாரா இயக்கியுள்ள இந்தப்படத்தில் கங்கனா விமானப்படை அதிகாரியாக நடித்துள்ளார். அன்சுல் சவுகான், ஆசிஷ் வித்யார்த்தி, விஷாக் நாயர் உட்பட பலர் நடித்துள்ளனர். வெளியான முதல் நாளில் இருந்தே இந்தப் படம் வசூலில் சரிவைச் சந்தித்து வருகிறது. பல திரையரங்குகளில் காட்சிகள் ரத்து செய்யப்பட்டன.

இதையடுத்து வீடியோ ஒன்றை வெளியிட்ட கங்கனா, "திரையரங்குகளுக்குச் சென்றுபடங்களைக்குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பார்த்துமகிழுங்கள். இல்லை என்றால் திரையரங்கை நடத்துகிறவர்கள் வாழ முடியாது" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு இந்தப் படம் லக்னோவில் சிறப்புக் காட்சியாகத் திரையிடப்பட்டது. அவருடன் அமைச்சர்கள் தயாசங்கர் சிங், தரம்பால் சிங் ஆகியோரும் படத்தைப் பார்த்தனர். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

இதுபற்றி கங்கனா கூறும்போது, "படத்தைப் பார்த்துவிட்டு யோகி ஆதித்யநாத் கண் கலங்கினார். அவர் எங்களை ஆதரிப்பதாகவும் இந்தப் படத்துடன் தொடர்பு கொள்ள தேசப்பற்றுள்ளவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் தெரிவித்தார். இது பெண்களின் சக்தியைப் பற்றிய படம்" என்றார்

# உண்மைக் கதையும், உணர்பூர்வ களமும் ஷாருக்கானின் 'டன்கி'



**மும்பை : நவ. 3,**

**ராஜ்குமார் ஹிரானி இயக்கத்தில் ஷாருக்கான் நடித்துள்ள 'டன்கி' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.**

'முன்னாபாய்எம்பிபிஎஸ்', '3 இடியட்ஸ்', 'பிகே', 'சஞ்சு' ஆகிய பாலிவுட் படங்களின் மூலம் தனக்கென தனி முத்திரை பதித்த இயக்குநர் ராஜ்குமார் ஹிரானி இயக்கியுள்ள புதிய படம் 'டன்கி'. 'பதான்', 'ஜவான்' படங்களுக்குப் பிறகு ஷாருக்கான் நடிப்பில் வெளியாகும் இப்படத்தில், டாப்ஸி, விக்கிகவுஷல், போமன் இரானி, விக்ரம் கோச்சார், அனில் குரோவர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ப்ரிதம் இசையமைத்துள்ளஇப்படத்தை ஷாருக்கானின் ரெட் சில்லீஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்நிலையில், ஷாருக்கானின் பிறந்தநாளையொட்டிபடத்தின் டீசரை படக்குழு நேற்று வெளியிட்டுள்ளது.

பிரமாண்டங்களைத் தவிர்த்து தனது கதையை மட்டுமே நம்பி களமிறங்கும் இயக்குநர் ராஜ்குமார் ஹிரானியின் வழக்கமான டச் இந்தப் படத்திலும் பிரதிபலிக்கிறது. லண்டன் செல்ல ஆசைப்படும் 5 பேரின் கதையை ஜாலியாகவும், உணர்வுபூர்வமாகவும் திரை ஆக்கம்செய்திருப்பதைஉணர முடிகிறது. டீசரின் முதல்காட்சி சீரியஸாகவும், அடுத்தடுத்த காட்சி நகைச்சுவையுடனும் நகர்கிறது.

நடுத்தர குடும்பத்து இளைஞனாக நீண்ட நாட்களுக்குப் பிறகு ஷாருக்கானை பார்ப்பது ரசிகர்களுக்கு மகிழ்ச்சி. உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு படம் உருவாகியுள்ளது. படம் 'டாங்கி ஃப்ளைட்' (கழுதை பயணம்) எனப்படும் சட்டத்துக்கு புறம்பான வெளிநாட்டு பயணங்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதை படத்தின் டைட்டிலும், டீசரின் காட்சிகளும் உறுதிபடுத்துகின்றன. படம் டிசம்பர் 22-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'குய்கோ' பெயர் – இயக்குநர் அருள் செழியன் விளக்கம்



**சென்னை : நவ. 3,**

**விதார்த், யோகிபாபு நடிக்கும் படத்துக்கு 'குய்கோ' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் ஸ்ரீபிரியங்கா, துர்கா, இளவரசு, முத்துக்குமார் உட்பட பலர் நடித்துள்ளனர். ராஜேஷ்யாதவ் ஒளிப்பதிவு செய்துள்ளார். அந்தோணிதாசன் இசை அமைத்துள்ளார். ஏஎஸ்டி பிலிம்ஸ் எல்எல்பிதயாரித்துள்ளது. படத்தை இயக்கியுள்ள டி.அருள்செழியன் கூறியதாவது:**

இது யதார்த்தமான சமூக நையாண்டி படம். யோகிபாபு, வளைகுடா நாட்டில் ஒட்டகம் மேய்ப்பவர். தனது தாய் இறந்துவிடுவதால் ஊருக்கு வருகிறார். அதுவரை அவர் உடலை 'பிரீஸர் பாக்ஸி'ல் வைத்திருக்கிறார்கள். அந்த பாக்ஸை கொண்டு வரும் விதார்த்துக்கும் அந்த ஊர்க்காரர்களுக்கும் பிரச்சினை ஒன்று ஏற்படுகிறது. ஊருக்கு யோகிபாபு வரும் வரை அவர் காத்திருக்கிறார். பிறகு என்ன நடக்கிறது என்பது படம். கதை மலைக்கிராமம் ஒன்றில் நடக்கிறது. 'ப்ரீஸர் பாக்ஸ்' பின்னணியில்தான் கதை நகரும். இதன் பின்னணியில் உருவான முதல் படம் இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். கதைக்குப் பொருத்தமாக இருந்ததால் 'குடியிருந்த கோயில்' என்று பெயர் வைக்க நினைத்தோம். அதைச் சுருக்கி 'குய்கோ' என்று வைத்துள்ளோம்.

ஷாருக்கானின் 'குச் குச் ஹோத்தாஹே' படத்தில்வரும் 'தும் பாஸ் ஆயே' பாடலை தமிழில் யோகிபாபுவுக்கு வைத்திருக்கிறோம். இது ரசிக்கும் படி இருக்கும். படம் முடிந்துவிட்டது. தீபாவளிக்குப் பிறகு ரிலீஸ் செய்ய இருக்கிறோம் என்று டி.அருள்செழியன் கூறினார்.

# 'லியோ' படத்துக்கு விஜய் கொடுத்த பரிசு : லோகேஷ் கனகராஜ் நெகிழ்ச்சி




**சென்னை : நவ. 3,**

**'லியோ' படவெற்றி விழாவில் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் 'லியோ' படம் குறித்தும், படம் பார்த்துவிட்டு நடிகர் விஜய் கொடுத்த பரிசு பற்றியும் பேசியிருப்பது ரசிகர்கள் மத்தியில்கவனத்தைப்பெற்று வருகிறது.**

'லியோ' பட வெற்றி விழா நேற்றுமுன்தினம்புதன்கிழமை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வில்இயக்குநர்லோகேஷ் கனகராஜ் கலந்து கொண்டு பேசுகையில், "'லியோ' படம் மூலம் எனக்கு இரண்டாவது முறையாக வாய்ப்பளித்த விஜய் அண்ணாவுக்கு நன்றி. இந்தப் படத்தின் பூஜைக்குப் பிறகு இந்தப்படம் தொடர்பாக எந்த நிகழ்ச்சியும் பெரிதாக நடக்கவில்லை. இந்த மேடை இப்போது மகிழ்ச்சியாக உள்ளது. இசை வெளியீட்டு விழா நடக்காமல் போனதில் எனக்கு வருத்தம்தான்.

இயக்குநர் வெற்றிமாறனை எனது 2, 3 படங்களில் வில்லனாக நடிக்க வைக்க முயற்சி செய்தேன். ஆனால், அவர் அதை மறுத்துவிட்டார். அவரை நடிகராக மாற்ற வேண்டும் என ஆசை. விரைவில் அது நடக்கும் என நினைக்கிறேன். 'லியோ' படத்தின் இறுதி வெர்ஷனை பார்த்துவிட்டு நடிகர் விஜய் என்னை கட்டி அணைத்து முத்தமிட்டார். மிகவும் சந்தோஷமாக இருந்தது" என்றவரிடம் படத்திற்காக என்ன பரிசு எதிர்பார்க்கிறீர்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஹெலிகாப்டருக்கு பெயின்ட் அடித்துக்கொண்டு இருக்கிறார்கள் என நினைக்கிறேன், காத்திருக்கிறேன்" என பேசி நிகழ்வை கலகலப்பாக்கினார்.



வரலாறு உலகம்

# ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்

# போர் குற்றங்களுக்கு சமமானது ஐ.நா மனித உரிமைகள் ஆணையம்

**டெல் அவிவ் : நவ. 3,**

**காசாவின் ஜபாலியா அகதிகள் முகாமின்மீது இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதல், போர் குற்றங்களுக்கு சமமானது என ஐநா மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.**



இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கி 25 நாட்களையும் கடந்துவிட்ட நிலையில், செவ்வாய் அன்று காசாவின் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸின் முக்கிய கமாண்டர் இப்ரஹிம் பியாரி கொல்லப்பட்டார் என செய்திகள் வெளியாகின.

இந்த தாக்குதலில், இப்ரஹிம் பியாரி உள்பட 50 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் தீவிரவாதிகள் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை செய்தித் தொடர்பாளர் லெஃப்டினண்ட் கர்னல் ஜொனாத்தன் கான்ரிக்கஸ் கூறியிருந்தார். ஆனால் இப்ரஹிம் பியாரி வீழ்த்தப்படவில்லை என்று ஹமாஸ் கூறியது. அதே சமயம் ஹமாஸ் அமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட தகவலின்படி, 195 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும், 777 பேர் காயமடைந்துள்ளதாகவும், 120-க்கும் அதிமானோர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஜபாலியா முகாம் மீதான தாக்குதலை ஈரான், எகிப்து, ஜோர்டான் போன்ற நாடுகள் கண்டித்துள்ளன. இஸ்ரேல் மனித உரிமை மீறல்களை செய்துவருவதாக அந்த நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்த நிலையில் இந்த தாக்குதல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் எக்ஸ் வலைதள பக்கத்தில், "அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவைக் கருத்தில் கொண்டு, இவை போர்க்குற்றங்களுக்கு சமமான தாக்குதல் எனக் கருதுகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் அபாயகரமான விகிதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றம்

## ஐ.நா. பொதுச் செயலாளர் வேதனை

**நியூயார்க் : நவ. 3,**

**ஈரான் நாட்டில் அபாயகரமான விகிதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதாகவும், நடப்பு ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் குறைந்தது 419 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளதாகவும் ஐநா பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**



சிறிய தவறுகளுக்கும் பெரிய தண்டனைகளைக் கொடுக்கக்கூடியவையாக அரபு நாடுகள் உள்ளன. ஈரானில், 22 வயது மாஷா அமினி என்ற இளம்பெண், அந்நாட்டின் இஸ்லாமிய ஆடைக் குறியீட்டை மீறியதாகக் கூறப்படும் தலைக்கவசத்தைத் தளர்த்தியதற்காக காவலர்களால் கைது செய்யப்பட்டார். அவரது மரணம் அந்நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெற்றன. அதில் பங்கேற்றதற்காக ஏழு பேர் தூக்கிலிடப்பட்டதாக ஐநா பொதுச் செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நீதித்துறை நடவடிக்கைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நியாயமான விசாரணை நடைபெறவில்லை என்றும், உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும் குட்டெரெஸ் தெரிவித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சரியான நேரத்தில் சட்ட அணுகல் நிராகரிக்கப்பட்டதாகவும், சித்ரவதை காரணமாக ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருக்கலாம் என்றும் ஐநா அறிக்கை கூறுகிறது.

கடந்த 7 மாதங்களில் தூக்கிலிடப்பட்ட 239 பேரில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தோடு ஒப்பிடும்போது 30% அதிகமாகும்.

மாஷா அமினிமரணத்தை அடுத்து, செப்டம்பர் 17, 2022 முதல் பிப்ரவரி 8, 2023 வரையிலான காலகட்டத்தில் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதற்காக 20,000 பேர் கைது செய்யப்பட்டதாக ஐநா மனித உரிமைகள் ஆணையம் தகவல் திரட்டி உள்ளதாக ஐநா பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் துணைத் தளபதியின் கூற்றுப்படி, கைது செய்யப்பட்டவர்களின் சராசரி வயது 15 என மதிப்பிடப்பட்டிருப்பதால், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளாக இருக்கலாம் என குட்டரெஸ் அச்சம் தெரிவித்துள்ளார். போராட்டங்களின் போது கைது செய்யப்பட்ட 22,000 பேர் மன்னிக்கப்பட்டதாக அரசு கூறினாலும், அவர்கள் வேறு காரணங்களுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்றும்ஈரான்அரசுகூறுவதை உறுதிப்படுத்துவது கடினம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


அனைத்து மரண தண்டனைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும், மரண தண்டனையை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மக்களையும் விடுவிக்க வேண்டும், பெண்கள் மற்றும் சிறுமிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட அனைவரும் கருத்து சுதந்திரத்துக்கான உரிமைகளை சட்டபூர்வமாக பயன்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஈரானை, ஐநா பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ் வலியுறுத்தி உள்ளார்.

## நைஜீரியாவில் கொடூரம்

# கிராமத்துக்குள் புகுந்து 37 பேரை சுட்டுக்கொன்ற பயங்கரவாதிகள்

**அபுஜா : நவ. 3,**

**நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் பயங்கரவாத இயக்கம் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேபோல் பல்வேறு ஆயுதக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.**



இந்நிலையில், கிராமத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 37 பேர் கொல்லப்பட்டனர். நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள கெய்டாம் மாவட்டம் குரோகயேயா கிராமத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். துப்பாக்கியால் சுட்டதில் 17 பேர் உயிரிழந்தனர். பின்னர் அவர்கள் தப்பிச்சென்றனர்.

பலியானோர் உடல்களை அடக்கம் செய்வதற்காக ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இதில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். அப்போதுபயங்கரவாதிகளின் கண்ணிவெடி தாக்குதலில் 20 பேர் பலியானார்கள்.

இந்த தாக்குதலையடுத்து அரசு அவசர பாதுகாப்பு கூட்டத்தைக் கூட்டியது. தாக்குதல் நடந்த பகுதிக்கு அதிகாரிகள் அனுப்பப்பட்டு கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நைஜீரியாவின் வடகிழக்கு, வடமேற்கு, மத்திய பிராந்தியங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல்கள் அடிக்கடி நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் – இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் தேவை பைடன் பேச்சும், வெள்ளை மாளிகை விளக்கமும்

**டெல் அவிவ் : நவ. 3,**

**இஸ்ரேல் – ஹமாஸ் இரு தரப்புகளுக்கும் இடையில் நடக்கும் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கோரிக்கை விடுத்ததாக செய்திகள் வெளியான நிலையில் அதிபரின் பேச்சு குறித்து வெள்ளை மாளிகை விளக்கம் கொடுத்துள்ளது.**



பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீதான இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்திருக்கிறது. ஹமாஸின் முக்கிய தலைவர்களை குறி வைத்து அழிக்கிறோம் என்ற பெயரில் இஸ்ரேல் ராணுவம் கண்மூடித்தனமாக காசா பகுதியில் தாக்குதல் நடத்தி வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன. இஸ்ரேல் தாக்குதலில் அதிகமாக அப்பாவி குழந்தைகள், பொதுமக்கள் அதிகளவில் உயிரிழந்துள்ளனர் என்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைகூட பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் காசா பகுதியில் இருக்கும் மக்களை பாதுகாக்க வேண்டும் என ஆங்காங்கே பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மினியாபோலிஸ் நகரில் சுமார் 200 பேர் அடங்கிய பொது மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது, ஒரு பெண் அவர் பேச்சில் குறுக்கிட்டு, போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்குமாறு கேட்டுக் கொண்டார். இதனால் நெருக்கடிக்கு உள்ளான ஜோ பைடன், "ஹமாஸ் - இஸ்ரேல் இடையே போர் இடைநிறுத்தம் தேவை. பிணைக் கைதிகளை மீட்பதற்கு தோதாக கால அவகாசம் தேவை" எனத் தெரிவித்துள்ளார். அதிபர் பைடனின் பேச்சு வைரலான நிலையில் அது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். "வெளிநாட்டினர் வெளியேறும் வகையிலும், பொதுமக்களுக்கு உதவி கிடைக்கும் வகையிலும் இஸ்ரேல்- ஹமாஸ் போரில் மனிதாபிமான இடைநிறுத்தம் தேவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்" என அவர்கள் விளக்கியுள்ளனர்.

காசா சுகாதார அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அக்டோபர் 7 ஆம் தேதி முதல், 3,648 குழந்தைகள் உட்பட, 8,796 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 195 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பிப்.11–ல் பொதுத் தேர்தல்

**இஸ்லாமாபாத் : நவ. 3,**

**பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு பிப்ரவரி 11-ம் தேதி நடைபெறும் என்று அந்நாட்டின் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**



பாகிஸ்தான் பிரதமராக இருந்த ஷபாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு, நாடாளுமன்றத்தை கடந்த ஆகஸ்ட் 9-ம் தேதி கலைத்தது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட 90 நாட்களில் தேர்தல்நடத்தப்படவேண்டும் என்பதுவிதிஎன்பதால், அதை உறுதிப்படுத்த வலியுறுத்தி பலரும் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி காஜி ஃபயஸ் இசா, நீதிபதிகள் அதார் மினால்லா, நீதிபதி அமின் உத்தின் கான் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இரண்டாவது நாளாக நேற்றும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சஜீல் ஸ்வாதி, 'தற்போது தொகுதி மறுவரையறை செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பணிகள் வரும் 30-ம் தேதி நிறைவடையும். இதையடுத்து, தொகுதிகளை உறுதிப்படுத்தும் பணி ஜனவரி 29-ம் தேதிக்குள் நிறைவடையும். இதனையடுத்து, பிப்ரவரி 11-ம் தேதி பொதுத் தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தும்' என தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் அரசு நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்து, ஷபாஸ் ஷெரீப் தலைமையில் கூட்டணி அரசு அமைந்தது. எனினும், அது முதல் அந்நாட்டில் நிலைத்தன்மை இல்லாமல் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. குறிப்பாக, அந்நாட்டின் பொருளாதாரம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. இதனால், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, மேல் சிகிச்சைக்காக லண்டன் சென்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் தாயகம் திரும்பி இருக்கிறார். தற்போது சிறையில் இருக்கும் இம்ரான்கான் விரைவில் ஜாமீனில் வெளியே வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. முன் எப்போதும் இல்லாத அளவாக இம்முறை, நாடாளுமன்றத் தேர்தல் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கெட்ட செய்தியை முதலில் சொல்லுங்க ஊழியர்களுக்கு எலான் மஸ்க் இட்ட அதிரடி கட்டளை

**வாஷிங்டன் : நவ. 3,**

**இனிவரும்சந்திப்புகளில் நிறுவனம் சம்பந்தபட்ட ஒரு கெட்ட செய்தியையாவது பணியாளர்கள் தெரிவிக்க வேண்டும். நல்ல செய்தியை மெதுவாகவும் தாமதமாகவும் கூறுங்கள் என எலான் மஸ்க் கூறியுள்ளார்**

பன்னாட்டு நிறுவனங்களில், தலைமை பொறுப்பில் உள்ளவர்களில் தொடங்கி சாதாரண பொறுப்பில் உள்ளவர்கள் வரை அனைத்து ஊழியர்களும் பங்கு பெறும் "ஆல் ஹேண்ட்ஸ் மீட்" எனப்படும் அனைத்து தரப்பு சந்திப்பு கூட்டங்கள் அவ்வப்போது நடைபெறுவது வழக்கம்.

இச்சந்திப்புகளில் நிறுவனங்களின் செயல் திட்டங்கள், வழிமுறைகள், எதிர்கால லட்சியங்கள் மற்றும் அவ்வப்போது திடீரென எழும் சிக்கல்கள் ஆகியவை குறித்து தீவிரமாக அலசப்படும். அவ்வாறு எக்ஸ் தள பணியாளர்கள் சந்திப்பில் நடந்த சம்பவம் இப்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

உலகின் நம்பர் 1 பணக்காரரான எலான் மஸ்க், பிரபல சமூக வலைதளமான ட்விட்டர் நிறுவனத்தை கடந்த ஆண்டு விலைக்கு வாங்கினார். அதன்பின்னர் தலைமை பொறுப்பிலிருந்த பலரை தடாலடியாக நீக்கிய அவர், சமீபத்தில் அந்நிறுவனத்தின் பெயரை 'எக்ஸ்' (X) என மாற்றினார். பரபரப்புகளுக்கு சொந்தக்காரரான எலான் மஸ்க் தனது ஊழியர்களுடன் "ஆல் ஹேண்ட்ஸ் மீட்" ஒன்றை சமீபத்தில் நடத்தினார். அந்த சந்திப்பில் மஸ்க் பல ஆச்சரியமான வழிமுறைகளை வலியுறுத்தியுள்ளதுதற்போது பேசுபொருளாகியுள்ளது.

அந்த சந்திப்பில் எலான் மஸ்க் பேசியது இதுதான், "நான் ஒரு விஷயத்தை வெளிப்படையாக கூற விரும்புகிறேன். இனி வரும் காலங்களில் எந்த சந்திப்புகளிலும், நிறுவனம் சம்பந்தபட்ட ஒரு கெட்ட செய்தியையாவது பணியாளர்கள் தெரிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கெட்ட செய்தியை கூட கூறலாம். நல்ல செய்தியை மெதுவாகவும் தாமதமாகவும் கூறுங்கள்; ஆனால், கெட்ட செய்தியை உரக்க, உடனடியாக, பல முறை கூறுங்கள்.



எனது 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தில் விண்வெளிக்கு ராக்கெட் அனுப்பும் போது அவை பல முறை தோல்வியுற்ற செய்தியையே நான் கேட்டு கொண்டவன். ஒரு ராக்கெட் வெடித்து சிதறுவதை விட கெட்ட செய்தியை இது போன்ற நிறுவனங்கள் தந்து விட முடியாது. உங்களுக்குள்ளேயே நடைபெறும் சந்திப்புகளிலும் கூட இதை ஒரு வழிமுறையாக பின்பற்றுங்கள்.

எனது 'டெஸ்லா' மற்றும் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனங்களில் அனைத்து ஊழியர்களும் சந்திப்புகளில் முதலில் கெட்ட செய்தியைத்தான் பகிர்ந்து கொள்வார்கள். அங்கெல்லாம் இந்த வழிமுறை கடைபிடிக்கப்படுகிறது. அதேபோல் இங்கும் அதையே நடைமுறைப்படுத்துங்கள்" என்று அவர் தெரிவித்தார். அதிரடி முடிவுகளுக்கு பெயர் பெற்ற எலான் மஸ்கின் இந்த வியப்பூட்டும் உத்தரவு குறித்துதான் தற்போது சமூக வலைதளங்கள் பெரிய அளவில் விவாதித்து வருகிறது.

# உலக நாடுகளை ஒன்றிணைக்கும் ஏஐ ஒத்துழைக்க உறுதியளித்த சீனா

**பிரிட்டன் : நவ. 3,**

**தொழில்நுட்ப துறையில் "ஆர்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ்" எனப்படும் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்த கூடிய தாக்கம் குறித்தும், அதனால் ஏற்பட கூடிய நன்மைகள், தீமைகள் மற்றும் அதனைபயன்படுத்தும் நிறுவனங்களுக்கு விதிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் குறித்தும் ஆலோசிக்க வல்லரசு நாடுகளின் தலைவர்கள் முன்வந்தனர்.**



இந்நிலையில்,இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் எடுத்த முயற்சிகளின் காரணமாக இது குறித்து ஆலோசிக்க தலைநகர் லண்டனுக்கு வெளியே, பிலெட்ச்லி பார்க் எனும் இடத்தில் 25 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட இரு நாள் சந்திப்பு நடந்தது. இரண்டாம் உலக போரை முடிவுக்கு கொண்டு வர பிலெட்ச்லி பார்க்கில்தான் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பில், ஏஐ-யின் தாக்கத்தை குறித்து நாடுகளுக்கிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கவும், ஏஐ தோற்றுவிக்கும் தொழில்நுட்ப ஆபத்துகளை உடனுக்குடன் கண்டறியவும், அவற்றை திறம்பட எதிர்கொண்டு நீக்கும் கொள்கைகளை வகுக்கவும் தீர்மானங்கள் இயற்றப்பட்டு அனைத்து நாடுகளும் "பிலெட்ச்லி பிரகடனம்" (ப்ளேச்சலே) எனும் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இந்த சந்திப்பில் சீனாவின் அறிவியல்மற்றும்தொழில்நுட்ப துறைக்கான துணை மந்திரி வூ ஜாவோஹுய், சர்வதேச கட்டமைப்புஒன்றைஉருவாக்க சீனாவும் ஒத்துழைக்க தயாராக உள்ளதாக உறுதியளித்தார்.

"பல நாட்டு தலைவர்கள் ஒரே நோக்கத்திற்காக ஒற்றுமையுடன் கலந்து கொண்டுள்ளது ஒரு சாதனை. அடுத்த 6 மாதங்களில் தென் கொரியாவில் ஒரு மாநாடும், அதற்கடுத்த 6 மாதங்களில் பிரான்ஸில் ஒரு மாநாடும் நடக்க உள்ளது" என இந்த சந்திப்பு குறித்து இங்கிலாந்து தொழில்நுட்பதுறை அமைச்சர் மிசெல் டொனெலான் தெரிவித்தார். இந்தியாவின் தொழில்நுட்பதுறை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் இதில் கலந்து கொண்டார்.

2023க்கான அதிகம் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக"ஏஐ" உள்ளதாக இங்கிலாந்து நாட்டின் காலின்ஸ்அகராதிவெளியிடும் பதிப்பகம் சில தினங்களுக்கு முன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ரா:ஃபா எல்லையை திறந்தது எகிப்து வெளிநாட்டவர்களுக்கு மட்டும் அனுமதி



**ராஃபா : நவ. 3,**

**காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் மூன்று வாரங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது.**

இந்தச் சூழலில், ராஃபா எல்லையை எகிப்து நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்தது.காசாவிலிருந்துராஃபா வழியேஎகிப்துக்குள்வருவதற்கு வெளிநாட்டவர்களுக்குமட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், போரில் தீவிர காயமடைந்த 81 பாலஸ்தீனர்களுக்கும் அனுமதிவழங்கப்பட்டுள்ளதாக காசா எல்லை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.எகிப்துக்கும் பாலஸ்தீனத்தின் காசாவுக்கும் எல்லைப் பகுதியாக ராஃபா அமைந்துள்ளது.

போரிலிருந்து தப்பிப்பதற்காக மக்கள் காசாவிலிருந்து வெளியேறி எகிப்துக்குள் நுழைய திட்டமிட்ட நிலையில், எகிப்து அரசு ராஃபா எல்லையை மூடியது. அதன் பிறகு, ராஃபா எல்லை வழியாக காசாவுக்குள் அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மட்டும் எகிப்து அனுமதி வழங்கியது. காசாவிலிருந்து மக்கள் எகிப்துக்குள் நுழைய அனுமதி மறுத்தது.

காசாவில் 24 லட்சம் மக்கள் வசித்துவருகிறனர். இவர்களில் 44 நாடுகளைச்சேர்ந்தமக்களும் அடக்கம். ஐநா உட்பட 28 சர்வதேச அமைப்புகள் காசாவில் உள்ளன. இந்நிலையில், அமெரிக்கா மற்றும் கத்தார் ஆகிய இரு நாடுகள் பேச்சுவார்த்தை மேற்கொண்டதையடுத்து, மக்கள் வெளியேறுவதற்காக தற்காலிகமாக ராஃபா எல்லையை எகிப்து திறந்துள்ளது.

காசாவில் உள்ள வெளிநாட்டவர்களுக்கும் இரட்டை குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே ராஃபா எல்லை வழியாக எகிப்துக்குள் வருவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், போரில் காய மடைந்த 81 பாலஸ்தீனர்களை சிகிச்சைக்காக எகிப்துக்குள் அழைத்து வருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போரால் காய முற்றவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியவர்களை அழைத்துச் செல்ல எகிப்து எல்லையில் ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

# அமெரிக்க உணவகத்தில் ஆர்டர் கொடுத்தது 'மில்க்ஷேக்' வந்தது ஒரு கோப்பை சிறுநீர்

**அமெரிக்கா : நவ. 3,**

**அமெரிக்காவில் உள்ள உடா பகுதியை சேர்ந்த உட் என்பவர் அங்குள்ள ஒரு உணவகத்தில் துரித உணவு வகை மற்றும் 'மில்க்ஷேக்' ஆர்டர் செய்துள்ளார். அதன்படி சிறிது நேரத்தில் ஆர்டர் செய்த உணவு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.**



பின்னர் ஆர்டர் செய்த உணவை சாப்பிட்ட உட், ஸ்ட்ரா மூலம் 'மில்க்ஷேக்'-ஐ பருக தொடங்கினார். அப்போது அது 'மில்க்ஷேக்' இல்லை என்பதையும், தனக்கு வினியோகம் செய்யப்பட்டது ஒரு கோப்பை சிறுநீர் என்பதையும் கண்டுபிடித்து அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக தனக்கு உணவு வினியோகம் செய்த நிறுவன டிரைவரை அழைத்து விசாரித்தார்.

அப்போது அவர், தனது வாகனத்தில் இருந்த 2 கோப்பைகள் மாறியதை ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது அந்த டிரைவர் நீண்ட நேரம் வேலை செய்வதாகவும், போதிய இடைவேளை எடுக்க முடியாததால் தனது காரில் டிஸ்போசபிள் கோப்பைகளில்சிறுநீர் கழித்து தன்னை ஆசுவாசபடுத்தி கொண்டதாகவும் கூறினார்.

இதுதொடர்பாக உணவு வினியோக நிறுவனத்தை அணுகி, தான் ஆர்டர் செய்த உணவுக்குரிய பணத்தை திரும்ப பெறும் முயற்சியில் உட் ஈடுபட்டார். இதற்கிடையே சம்பந்தப்பட்ட டிரைவர் மீது உணவு வினியோக நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.



# சந்திரசேகர ராவ் கொள்ளையடித்த பணம் மக்கள் வங்கி கணக்கில் செலுத்தப்படும்

# தேர்தலுக்கு முன் எதிர்கட்சித் தலைவர்களை கைது செய்ய பாஜக அரசு சதி திட்டம்





# ஆளுநர் கையால் பட்டம் வாங்க மறுத்து பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த பேராசிரியர்கள்


| சென்னை / புதுக்கோட்டை | 03.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

03.11.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஏ. கே. செட்டியார் , தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி (பி.1911) (இ.1983)



அன்னை பூபதி , இந்திய அமைதிப்படைக்கு எதிராக சாகும்வரை உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (பி.1932) (இ.1988)



அமர்த்தியா சென் , நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளியலாளர் (பி.1933)



## இன்றைய நினைவு நாள்

ஆன்றி மட்டீசு, , பிரான்சிய ஓவியர், சிற்பி (பி.1869) (இ.1954)



யோன் மெட்சிங்கர் , பிரான்சிய ஓவியர் (பி.1883) (இ.1956)



ஈ. வி. சரோஜா , தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1935) (இ.2006)



டபிள்யூ. டி. அமரதேவா , சிங்களப் பாடகர், இசையமைப்பாளர் (பி.1927) (இ.2016)

